திராவிடநாடு

10—11—57 | வார வெளியீடு | விலை 16 காசு

அன்றும் இன்றும்

—அறிவுடைநம்பி—

[அழகப்பா கல்லூரி]

ஆடிவரு சிற்றலைகள் பெரிதா யாகி
அசைந்துவரு காற்றதுவும் புயலாய் மாறி
ஓடிவரு நண்டினங்க ளொளித்துக் கொள்ள
உட்கிடக்குஞ் சிப்பியது மேலகீ ழாக
நாடிவரு மீனவர்கள் நடுங்கி ஓட
நாவாய்கள் நடுக்குற்றுப் பிறழக் காற்றுத்.
தேடிவரு மிருபாலர் சிதறி யோடத்
திரைகடலே குமரியதைக் கொண்டாயந்நாள்

மாண்டபுக ழரசனவன் கண்டா னிந்த
மாநிலத்திற் சீர்பெற்றே யோங்கி நிற்க
ஆண்டபுகழ்ப் பகுதிகளிற் சிலவற் றேடே
யாறதுவாம் பஃறுளியு மழிந்த கோலம்
நீண்டபுகழ் கொண்டிலங்கு வேந்த னந்தே
நிகழ்விற்கு வருந்தாமற் படைதி ரட்டி
நீண்டதொட ரிமயத்தோ டரிய கங்கை
நீள்தமிழ் நாட்டிற்குச் சேர்த்தா னன்று.

இழந்திட்டோம் பகுதியினை யென்ற சொற்கள்
ஈட்டியெனத் தன்மார்பிற் பாய்தல் தாங்கா
திழந்திட்ட பகுதிக்கு மாற்றாய் வேறு
மிருநிலத்தை யாற்றோடு சேர்த்தா னவ்வோன்
இழந்திட்ட பொருளுக்கே ஈடு செய்யும்
எண்ணமது கொண்டானே ஆட்சி வல்லோன்
இழந்திட்டோம் பெரும்பகுதி என்பது கேட்டும்
இருக்கின்ற குமையரா யிற்றை நல்லோர்.

விரிந்திட்ட தமிழகத்தின் வடக்குக் காட்டும்
வேங்கடமும் நமக்கில்லை என்ற போழ்தும்
பிரிந்திட்டோம் பீர்மேட்டுத் தமிழர் தம்மைப்
பிறிதுமொரு தேவிகுளம் போன தென்று
பரிந்திட்டுத் தமிழறிஞர் துடித்த போழ்தும்
பதறவில்லை யுளமென்னி லிவர்க ளெல்லாம்
வருந்திட்ட தமிழரிடர் துடைப்பா ரென்று
வாய்விட்டுச் சொலமனமே நாணு தய்யோ!

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது, சட்டசபையில் நடைபெற்ற நான்கு நாட்கள் விவாதத்துக்குப் பிறகு, முடிவுபெறும் தருவாயில் **அண்ணாதுரை** எழுந்திருந்து, சபையின்முன், விளக்கம் ஒன்று அளித்தார்.

ஆச்சரியமும், ஏனிப்படி என்கிற சந்தேகமும், என்ன காரணத்தால் இந்த விளக்கம் தரப்படுகிறது என்கிற பரபரப்பும், சபையில் தென்பட்டது.

"சபைத் தலைவர் அவர்களே! நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றிய விவாதத்தில் எனது கட்சியினர் பங்கு கொண்டபோதே, இந்தச் சர்க்காரின்மீது நாங்கள் நம்பிக்கை வைக்க மறுக்கும் காரணம், இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சம்பவங்கள் பற்றி ஒரு நீதிமன்ற விசாரணையை நிறுவ மறுப்பது தான் என்று நான் தெளிவு படுத்தியிருக்கிறேன்.

ஆனால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவரோ, முன்பு பேசியபோதும் சரி, இப்போதும் சரி, முதலமைச்சர் காமராஜரும், உள்துறை அமைச்சர் பக்தவத்சலமுமே அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு காரணமானவர் என்றும், அவர்கள் தூண்டுதல் பேரிலேயே இவைகள் ஏற்பட்டதாகும் என்றும் வலியுறுத்தி வலியுறுத்திச் சொல்கிறார்.

இக்கருத்தை, நாங்கள் ஏற்கவில்லை. எங்களுக்குள்ள அதிருப்தியெல்லாம், நீதி மன்ற விசாரணையைக் குறித்துச் சர்க்காரின் போக்கு சரியில்லை, என்பதுதான்.

> சட்டசபையில், ஓட்டெடுப்பில் கலக்காமல், 'வாக் அவுட்' செய்யுமுன், தரப்பட்ட விளக்கம்.

சட்டசபை வேலை முறைக் கமிட்டியின் கூட்டத்தில், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஒருபோதும் வற்புறுத்துவதில்லை யென்று சகல கட்சித் தலைவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நானும் அதில் இருந்தேன். இப்போது, அந்த முறை, திடீரென மாற்றப்பட்டது குறித்து நான் என் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தி. மு. க. எதனை வலியுறுத்த வேண்டுமென்று விரும்புகிறதோ, அதற்கு நேர்மாறான ஒரு விஷயத்தை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் வலியுறுத்தும், கட்டம் ஏற்பட்டிருக்கிறது, இங்கு.

எனவே, அந்தப் பிரரேபணையின்மீது வாக்கெடுப்பில் கலந்துகொள்ளும் நிலைமை உண்டாகவில்லை. அதே சமயத்தில், ஒரு நீதிமன்ற விசாரணையை அமைக்கவேண்டும் என்கிற எங்களது நியாயமான, தகுதியான கோரிக்கையையும், அரசாங்கம் ஏற்க மறுக்கிறது. எனவே, எங்களது கண்டனத்தைக் காட்டிக்கொள்ள வேண்டியவர்களாகி யிருக்கிறோம். ஆகவே, நானும் என் கட்சி உறுப்பினர்களும், நீதிமன்ற விசாரணையொன்றை அமைக்கப் பிடிவாதமாக மறுத்திடும் சர்க்காரின் போக்கைக் கண்டிக்கும் அறிகுறியாக சபையை விட்டு வெளியேறுகிறோம்."

இவ்விதம் கூறிவிட்டு, சி. என். ஏ. - யும் ஏனைய தி. மு. க. சட்டசபை உறுப்பினர்களும், சபையை விட்டு வெளியேறினர்.

வளரும் நாம்!

[16] ஆண்டு சந்தா ரூ. 8 [10—11—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 17

ஆர்ப்பாட்டம் செய்வதும், அது முடிந்த கொஞ்ச நாளைக்குள் ஓய்ந்துபோய் உட்கார்ந்துவிடுவதும், பொதுவாக எல்லோருக்கும், குறிப்பாக எந்தத் தேசிய இயக்கத்துக்குமே கூடாத ஒன்றாகும்.

நம்முடைய இலட்சியம் தெளிவாக இருக்கிறது; அதைப் பெற நாம் என்ன செய்யவேண்டும் என்பதும் நமக்கு நன்றாகப் புரிகிறது; அதனால்தான், எதையும் பொதுநோக்கோடு அணுகி, கூட்டத்தோடு கோவிந்தா போடாமல், ஒவ்வொரு காரியத்தையும் நாம் சாதித்து வருகிறோம்.

கொள்கையும் குறிக்கோளும் நமக்குத் தெளிவாக இருப்பதால், பிறர் ஏசும்போதுகூட நமக்கு ஆத்திரம் வருவதில்லை; ஈடுபடும் கிளர்ச்சிகளிலும் ஏதாவது ஒரு வகையில் வெற்றி காணாமல் போவதில்லை; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் மூன்று தாரக மந்திரங்களையும் உள்ளத்திலே ஏந்தி, பாடுபட்டுக்கொண்டு வருகிறோம். நாட்டின் நன்மைக்கான எந்த செயல்களிலும், தி. மு. க. ஈடுபடாமலிருப்பதில்லை; யார் அழைத்தாலும், நல்ல காரியம் எனின் நாம் நமது ஒத்துழைப்பை மறுப்பதும் இடையாது. அதனால்தான் சட்டசபையில், "புயலும் வெள்ளமும் ஏற்பட்டபோது, எதிர்க் கட்சிகள் என்ன செய்தன?", என்று காங்கிரஸ் அமைச்சர் பக்தவத்சலம் கேட்க, நமது அன்பழகன் எழுந்து, "தி. மு. க. புயல் நிவாரண நிதியும், தறி ஆடையும் வழங்கியது," என்றதும், "நான் தி. மு. க. - வைச் சொல்லவில்லை! ஏனைய கட்சிகளைப் பற்றிச் சொன்னேன்", என்று அமைச்சர் பதிலளிக்க நேர்ந்தது. ஆள்வோருக்கு வேண்டுமென்றே தொல்லை கொடுப்பதற்காக, மக்களைப் புலிகளாக்கி விடுவதில்லை, நாம். அதே சமயத்தில் ஆளும் அரசு, புலியாக மாறி மக்கள்மீது பாய்ந்தால், ஓடிச் சென்று பிடித்துத் தடுக்கவும் அஞ்சுவதில்லை.

இதனால்தான், இன்று நமக்கு, தென்னாட்டு அரசியலில், ஒரு நல்ல இடம் உருவாகி வருகிறது. நாம் பாடுபட்டு வரும், விடுதலைபுரிப் பயணத்துக்கும், எங்கிருந்தெல்லாமோ அன்பும் ஆதரவும் கிடைக்கிறது.

சூது, நாம் அறியாதது! தூய்மை, நம் சொத்து! மக்கள் பணியே நம் அரிச்சுவடி! அரசியல் நாகரிகமும், அனைவரையும் உடன்பிறந்தவர்கள்போல் எண்ணுவதும் நமது பாதை.

நாட்டின் வாழ்வில், நானாவித கட்சிகளிருப்பினும், அவைகளுக்கும் நமக்கும் அடிப்படையில் ஒரு வித்தியாசம் உண்டு. அனைத்தும், மக்கள் சேவைக்காகத்தான் உள்ளன. எனினும், நமது குறிக்கோளும், அதைப் பெற நாம் நடைபோடும் மார்க்கமும் வேறு.

தேங்காயிருக்கிறது! அதை தேவாலயத்துக்கு எடுத்துச் சென்று உடைத்து, அர்ச்சனை செய்யச் சொல்லி, ஒரு மூடியை அர்ச்சகருக்குக் கொடுத்து விட்டு, இன்னொரு மூடியை வீட்டுக்குக் கொண்டு செல்பவர்கள் உண்டு.

சிலர், வீட்டு விசேடத்தின்போது 'திருஷ்டி' கழிப்பதாகச் சொல்லி, நடுவீதியில்—உடைப்பார்கள்; அதைப் பொறுக்கச் செல்பவர்களில் சாமர்த்தியம் உள்ளவனுக்கு நிறையத் தேங்காய் கிடைக்கும்; மற்றவர்களுக்கு ஓடுதான் கிடைக்கும்.

இன்னொரு விதமும் உண்டு! தேங்காயைத் தாய்மார்களிடம் கொடுத்தால், அதை உடைத்துப் பதமாகத் திருவி, எந்தப் பண்டத்திலே சேர்த்தால் இனிப்போடு சுவை தரும் என்பதறிந்து, பக்குவமாகச் சேர்த்துப் படைப்பார்கள்.

கட்சிகளும், இப்படித்தான்! நாம், மூன்றாவது சொன்ன விதம் போன்றவர்கள்!!

சில கட்சிகள், தங்களுக்கிருக்கும் செல்வாக்கை 'சூறைக்காய்' உடைப்பது போலப் பயன்படுத்தி விடுகின்றன. சிலருக்கு மண்டைகள் உடைகின்றன; சாமர்த்தியமுள்ளவன் தேங்காயுடனும், கோஞ்சலாயுள்ளவன் ஓட்டையும் எடுத்துக்கொண்டு போகிறான்.

தி.மு.க. தன் செல்வாக்கை, வீணாரவாரங்களில் செலவிடாமல், ஒருவரோடு இன்னொருவர் மோதிக் கொள்ளாமல் பயன்படுத்தி வருகிறது. வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்க்க வலிவைத் திரட்டுவதுதான் நமது குறிக்கோள்! அதற்கு, எங்கிருந்தெல்லாம், பலம் சேரும் என்று உற்று நோக்குவதுதான் நமது இன்றைய மார்க்கம்!!

தெளிவும் திண்மையும் நமது இலட்சியத்தில் இருக்கிற காரணத்தால், அடிக்கும் கைகளே அணைக்கும் கட்டமும் கிடைக்கிறது நமக்கு. ஏசியோரும் கூட என்றாவது ஒரு நாள், நமது கொள்கையினைப் பேசவேண்டியவர்களாகி விடுகிறார்கள். அறிந்தோ, அறியாமலோ, நமது சக்தியின் அளவையும், நாம் காட்டும் அரசியல் கண்ணியத்தையும், நமது கொள்கையின் பாலுள்ள உண்மைத் தன்மையையும் எவரும் ஒப்பிட நேருகிறது. சட்டசபையில், 'பத்தாண்டு கால சமாதான ஒப்பந்தத்துக்கு', நிதியமைச்சர் அன்போடு அழைப்பு விடுத்தாரே, அதன் காரணம், இதுதான்.

வடநாட்டு டில்லி, அதிகாரங்கள் யாவையும் குவித்துவைத்திருப்பதையும், அதனால் பல காரியங்கள் உருப்படாமல் போவதையும், நாம் கண்டித்து வருகிறோம்.

கார்டு, கவர், மணியார்டர் பாரங்களில்கூட இந்தி மொழியா எனவும், வேதனையோடு கேட்டு வருகிறோம்.

இந்தக் கூற்றுகளை, சமயம் வரும்போதெல்லாம், மறுப்பவர் நமது நிதி அமைச்சர்! வடக்கு—தெற்கு என்று நாம் பேசுவது, அவருக்கு பிடிக்காத ஒன்று. ஆனால் அப்படிப்பட்டவரே, கடந்த 4ந் தேதி சென்னையில் தேசிய சேமிப்பு தென்மண்டல முதலாவது மாநாட்டினைத் துவக்கிவைக்கையில் சொன்னாராம்.

> "இந்த அமைப்பு, ராஜ்ய சர்க்காரிடமிருந்தால்தான் வெற்றி பெறக்கூடும். ராஜ்ய சர்க்காருக்குததான் கிராமங்களைப் பற்றி நன்றாகத் தெரியும். மத்திய சர்க்கார் எப்படி எல்லா இடங்களையும், கவனிக்க முடியும்."

என்று கேட்டிருக்கிறார்! இதன் பொருள் என்ன? விளக்கிச் சொன்னால், திராவிடநாடு திராவிடருக்கே, என்பதுதான்!!

இந்த ஒரு அமைப்பு மட்டுமல்ல, இதுபோல எல்லாத் துறை சம்பந்தமான அதிகாரங்களும் நமக்கு இருந்தால், எவ்வளவோ நன்றாகக்கவனித்து ஆட்சி நடத்தலாம்—என்கிறோம், நாம்.

> "சேமிப்புப் பத்திரங்களையும் ரசீதுகளையும் பிரதேச மொழியில் அச்சிட வேண்டும். புயல் நிவாரணம் சம்பந்தமான வேலைகளை நிதி இலாகா காரியதரிசி (டி.ஏ. வர்கீஸ்) கவனித்துக் கொண்டிருந்த பொழுது எழுதப்படிக்கத் தெரியாதவரின் நிலைமை அவருக்கு ஏற்பட்டது. மணியார்டர் பிரதிகள் **இந்தியில்** அச்சிடப்பட்டிருப்பதால் இடம் மாறி அவர் கையொப்பமிட்டார். நிதிக் காரியதரிசிக்கே இந்த நிலைமை என்றால் பாமர மக்களுக்கு எவ்வளவு கஷ்டம் ஏற்படும்?"

இதுவும் அதே கூட்டத்தில் நிதி அமைச்சர் கூறியதுதான்! இந்திக்கு சாவுமணி அடிக்க வேண்டும் என்பதற்கு இதைவிட நல்லதோர் உதாரணம் யார்தான் தரமுடியும்? **நிதி இலாகா காரியதரிசிக்கே இந்நிலையென்றால், பாமரமக்களுக்குச் சொல்லவா வேண்டும்,** என்கிறார்!!

இப்படியெல்லாம் பல சமயங்களில், எவ்வளவுதான் மூடி மறைத்தாலும், அவர்களையும் மீறி உண்மை வெளிப்பட்டுவிடுகிறது. காரணம், நாம், உருவான அடிப்பீடத்தின் மீது நிற்கிறோம்! நாம் தாங்கியிருக்கும் கொள்கை அப்படிப்பட்டது!!

உருண்டோடி வரும் ஒவ்வொரு விநாடியும், நமக்கு, எதிர்காலத்தில் மிகமிக முக்கியமானதாயிருக்கலாம். ஏனெனில், டில்லி, இந்தி மொழி குறித்து என்ன முடிவுக்கு வரப்போகிறதென்று தெரியவில்லை! ஒருவேளை, **கட்டாயம்தான்** என்று தெளிவாக உத்தரவு பிறப்பித்துவிடுமேயானால் நமக்கு வேலை நிரம்ப இருக்கிறது — அரசின் அட்டகாசத்தை, ஆணவத்தை, ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டியவர்களாக, நாம்தான் இருப்போம், ஆகவே நமது கழகத்தவர்கள், மிகவும் கவலையோடும், கடமைப் பொறுப்போடும் காரியமாற்றிட வேண்டிய கட்டங்கள் விரைகின்றன, என்போம்.

இன்று பல இடங்களிலிருந்தும் கிடைத்திடும் வலிமையை, கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அதை வெளியில் இழுத்து, வீம்புக்கும் வீணாரவாரத்துக்கும் பயன்படுத்திக்கொள்ள, ஏனையோர் முயலக்கூடும்! அதற்கு ஆளாகாமல், வலிமையை 'சூறைக்காயாக' ஆக்கிவிடாமல், இருந்திடும் மனத்திண்மை, வரவர வளரவேண்டும். புலிவேட்டைக்குப் போவோர், வழிமாறி எலி வேட்டையைச் சதமென எண்ணுவது, கூடாது என்பதுதான் பழைய உதாரணமாயிற்றே! அதையே. மீண்டும் நினைவூட்டுகிறோம் வரவிருக்கிறது, இந்தி எதிர்ப்புப் போர்! வலிமையை அதற்குப் பயன்படுத்த வழி செய்யுங்கள்!!

கனவுலகில்!

பார்வதி :- எவ்வளவு நேரம்தான் சொக்கட்டானுடுவது சுவாமி! வாருங்கள்......எங்காவது உல்லாசமாகப் போய்விட்டு வரலாம்...

பரம :- உன் விருப்பம் போல் ஆகுக...யாரங்கே? போய் என் வாகனத்தை அழைத்துவாருங்கள்...

[பூதகணங்களில் ஒன்று புறப்பட்டுச் செல்கிறது.]

பார் :- நாதா! தலையிலிருக்கும் அந்த இரண்டு பேரையும்...

பர :- யாரைச் சொல்கிருய், கங்கையையும் மதியையுமா?

பார் :- ஆம், பிரபோ! நாம் ஆனந்தமாயிருக்கச் செல்லுமிடத்திற்குக்கூடவா அவர்களையும் கொண்டு போவது...எனக்கு வெட்கமாயிருக்கிறது நாதா!

பர :- சரி ;பிரியே! உன் இஷ்டம் போல் அவர்களை...

[என்று தன் 'ஜடா முடி'யைக் கழற்றி ஒரு பக்கமாக வைக்கிருர். அப்போது, வாகனத்தை அழைக்கப்போனவர், திரும்பி வர...]

பர :- எங்கே நந்தி!

பூத :- வரமுடியாது என்று கூறிவிட்டார் பிரபோ!

ப :- என்ன...?

[கோபம் வந்ததைக் கண்ட பார்வதி, ரசமான கட்டம் நாசமாகிவிடப் போகிறதென்று பயந்து...].

பார் :- நாதா! நந்தி வராவிட்டால் என்ன.........என் அண்ணன் திருமாலுக்குச் சொல்லியனுப்பினுல் கருடனை கொஞ்சம் இரவல் தரமாட்டாரா?

[பார்வதி சொல்லி முடிப்பதற்குள், 'அம்மா!' என்று ஆத்திரமாக ஒரு குரல் கேட்கிறது. வேலும் கையுமாகச் சுப்பிரமணியரும், கொழுக்கட்டையும் கையுமாகப் பிள்ளையாரும் வந்து நிற்கின்றனர்...]

பார் :- என்ன சுப்பிரமணியா!

சுப் :- தாயே! அப்பாவுக்குத்தான் பிச்சையெடுக்கும் புத்தி போகாது...தாங்களுமா அப்படியாக வேண்டும்? நாங்களிருக்கும்போது உங்களுக்கு என்ன கவலை...

வண்டு

பிள் :- அதான் நானும் கேட்கிறேன்! நந்தி வராவிட்டால் என்னுடைய மூஞ்சூறு இருக்கவே இருக்கிறதே...

சுப் :- உன் மூஞ்சூறில் மனிதன் ஏறுவானு...........மயில் இருக்கிறது தாயே, என் அழகு மயில்! கலாபமயில்!!

பிள் :- வள்ளியை வர்ணிக்கிருயா மணி......?

சுப் :- உன் பிரம்மச்சாரி புத்தி எங்குபோகும்...என்வாகனமாம் மயிலைச் சொல்கிறேன் மயிலை!

பிள் :- என் மூஞ்சூறில் தான் அம்மா அப்பா இரண்டுபேரும் சவாரி செய்யவேண்டும்......

சுப் :- கூடாது! என் மயிலில் தான் போகவேண்டும்......

பிள் :- முடியாது!

சுப் :- நான் விடமாட்டேன்...

பிள் :- போடா...

[சுப்ரமணியம், பிள்ளையாரின் காதைப்பிடிக்க அவர் கத்துகிருர். இதைக் கண்ட பார்வதி......]

பார் :- விடு சுப்பிரமணியம்! அண்ணன் என்கிற மரியாதை வேண்டாம்...போய் இரண்டுபேருமே உங்கள் வாகனங்களைக் கொண்டுவாருங்கள்...யார் சீக்கிரமாக வருகிறீர்களோ அவர்கள் வாகனத்தில் நாங்கள் பயணம் செல்லுகிறோம்......

பிள் :- சரி!

சுப் :- ஓ!!

[என்று ஓடுகின்றனர். இரண்டுபேரும். மீண்டும் சொக்கட்டான் ஆட்டம்ஆடுகிருர்கள் பரமசிவனும் பார்வதியும்.]

*

[ஒரு சோலை. அங்கே, காளை, மயில், கருடன், மூஞ்சூறு முதலியவை இருக்கின்றன. அவைகளுக்கு மத்தியில் தம்புராவும் கையுமாக நாரதரும் இருக்கிருர்]

காளை :- உண்மையாகவா நாரதரே......

நா :- ஆமாம்! அவர்கள் சங்கத்தின் பெயர் பாரத சேவா சமாஜம்......அதில் இருப்போர்கள் எல்லாம் சந்நியாசிகளும் சாதுக்களும்தான்...அவர்கள் கூட்டிய மாநாட்டுக்கு இந்தியாவை ஆள்கிற ராசேந்திர பிரசாத் கூட அறிவுரை வழங்கியிருக்கிருர்... அங்குதான், பிராணிகளிடம் அன்பு வேண்டும் என்று தீர்மானம் போட்டிருக்கிருர்கள்...

மூஞ் :- நாரதப் பெருமானே! இந்தப் பிள்ளையாரைத் தூக்கிக்

கொண்டு நான் என்ன பாடுபடு கிறேன் தெரியுமா......

கரு:- என் கழுத்து எவ்வளவு சிறியது......இதில் கம்பீரமாக உட்கார்ந்துவிடுகிறார் மகா விஷ்ணு. பல சமயங்களில் ஸ்ரீதேவி மூதேவி இரண்டு பேரையும் உட்காரவைத்துக் கொள்கிறார்...அப்பப்ப...

மயில்:- என் கதியும் அப்படித் தான் நாரதரே! மூன்றுபேரைத் தூக்கிக்கொண்டு, அதே சமயத் தில் கீழே கிடக்கும் பாம்பையும் 'பதம்'பார்க்கும்போது ஏண்டா இந்த ஜென்மம் எடுத்தோம் என்று இருக்கிறது...

நார:- ...இனிமேல் நீங்கள் கவ லைப்பட வேண்டாம். பக்தர்கள் போட்டிருக்கிற தீர்மானத்தைச் சொல்லி, 'ரெஸ்டு' எடுத்துக் கொள்ளுங்கள்...... மறுத்தால் 'ஸ்டிரைக்' செய்யுங்கள்...மிரட் டினால் பூலோகத்துக்குப் போய் விடுவதாகச் சொல்லுங்கள்...

காளை:- அங்கே போனாலும் இந் தப் 'பாவிகள்' விடமாட்டார் களே சுவாமி! தேடிக்கொண்டு வந்து விடுவார்களே...

நார:- பூலோகத்துக்குப் புறப் பட்டு வந்து உங்கள்மீது ஏறிச் சவாரி செய்ய இவர்கள் முயன் றால், இரண்டு குற்றங்களுக் காக இவர்களைப் பூலோக சர்க் கார் கைது செய்துவிடும்...

எல்லோரும்!:- நிசமாகவா...?

நார:- ஆமாம்! முதல் குற்றம், பிராணிகளை இவர்கள் இம்சித் தார்கள் என்பது. 'வெடிரினரி இன்ஸ்பெக்டர்'கள் ஊருக்கு ஊர் இருக்கிறார்கள்...இரண்டா வது குற்றம், ஒவ்வொருவரும் ஒரே மனைவிக்குப் பதில் இரு மனைவிகளை வைத்திருப்பதால் பலதார மணச்சட்டப்படி கைது செய்யப்படுவார்கள்...

[நாரதரைப் பார்த்து ஒளிந்து நின்று கவ னித்த பிள்ளையாரும் சுப்ரமணியமும் கலக்க மடைகிறார்கள். திரும் புகிறார்கள், கலவரத் தோடு.]

*

சுப்:- ஆபத்து!

பிள்:- ஆபத்து!!

[பார்வதியும் பரமனும் தலை நிமிர்ந்து...... திகைக்கும்போது, இன்னொரு திசையி லிருந்து "கேட்டீரா, கதையை!" எனும் சப் தம் கேட்கிறது. மகா விஷ்ணு வருகிறார்.]

பார்:- என்ன — குழந்தைகாள்? யாருக்கு—என்ன—ஆபத்து!!

சுப்:- நமக்குத்தான்! இந்தப் பூலோக வாசிகள் சூடத்தையும் சாம்பிராணியையும் காட்டிக் கொண்டே நம் மானத்தை வாங்குகிறார்கள்...

பர:- நாஸ்திக வாதம் பேசாதே மணி...

சுப்:- இல்லையப்பா! நான் உண்மை யைச் சொல்லுகிறேன்...பிராணி களுக்கு ஜீவகாருண்யம் காட்ட வேண்டும் என்று...

மகாவி:- புத்தன் என்று-ஒருவன் கிளம்பிப் போதித்தான்!

பரம:- ஏன்! என் பக்தர்கள்கூட அன்பே சிவம் என்று போதித் திருக்கிறார்கள்...

பார்:- நீங்கள் இரண்டுபேரும் சண்டைபோட ஆரம்பித்து விடாதீர்கள்..............சொல்லு சுப்பிரமணியம்!

சுப்:- ஜீவகாருணியம் காட்ட வேண்டுமென்று நமது பக்தர் களாம் சாதுக்கள் கூடி சர்க்கா ரைக் கேட்டிருக்கிறார்களாம்... இதைச்சொல்லி நமது வாகனங் களை 'ஸ்டிரைக்' செய்யும்படி தூண்டிவிட்டுவிட்டார் நாரதர்..

பர:- என்ன திமிர் இந்த நாரத னுக்கு...

[என்று தன் சூலாயு தத்தை எடுக்கிறார்...]

திரு:- என் சக்கராயுதத்தை விட்டு சதா சண்டை மூட்டிக்கொண் டிருக்கும் அவனை...

[என்று திருமாலும் கோபங் கொள்கிறார். அப்போது, "நிறுத் துங்கள்...," என்று குரல் கொடுத்துக் கொண்டே நுழைந்த நாரதர்]

நார:- சூலாயுதத்தையும் சக்கரா யுதத்தையும் தூக்கிவிட்டீர்க ளாக்கும்...... ஏன்? சுப்பிரமணி யரே! உமது வேலாயுதத்தை யும் எடுத்துக்கொள்ளுமே...

பர:- நாரதா...!

[கோபத்துடன்]

நார:- கோபம் வேண்டாம் பிரபோ ...கொஞ்சம் பின்னால் திரும்பிப் பாருங்கள்...

[திரும்பிப் பார்த்து]

பர:- என்ன பார்க்கச் சொல்லு கிறாய்...

நார:- நீங்கள் கழற்றி வைத்திருக் கும் ஜடாமுடியை...

[எல்லோரும் — பார்க் கின்றனர். சடாமுடி யில் புதிதாக இரு சந்திரன்கள் ஒட்டிக் கொண்டிருக்கின்றன ...ஒருவருக்கும் புரிய வில்லை ... திகைத்துப் போன பரமசிவன்...]

பர:- என்ன நாரதா இது...

நார:- ரஷ்யர்கள் கண்டுபிடித் திருக்கும் சந்திரன், பெரு மானே!

திரு:- என்ன? தேவலோகத்தை விட்டு பிரம்மா ரஷ்யாவுக்காப் போய்விட்டான்...

நார:- இல்லை! பிரம்மாவையும் மிஞ்சுகிற அளவுக்கு மனிதர் கள் வளர்ந்துவிட்டார்கள்... சக்கராயுதத்தையும், சூலத்தை யும் எடுத்துக்கொண்டு நீங்கள் பூலோகத்துக்குப் போனால் விடமாட்டார்கள் மக்கள்...

எல்லோரும்:- ஏன்?

நா:- அன்பு — அகிம்சை இவை கள் வளரவேண்டும்...ஆயுதங் கள் எல்லாம் பறிமுதல் செய் யப்படவேண்டும் என்று ஒவ் வொருவரும் பேசிவருகிறார்கள் ......உலகப் பற்றற்று, உங்களி டம் பக்திகொண்ட சாதுக்கள் என்போரே இதுபோல ஆமதா பாத்தில் மாநாடு கூட்ட ஆரம் பித்துவிட்டார்கள்...

மகா:- முற்றும் துறந்த அந்த ஆத்மாக்களுக்கு ஏனிந்த சர்ச்சைகள்......

நா:- பந்தம் யாரைவிட்டது பிரபோ! அதனால், அம்மாநாட் டில், சமாதானம் தழைக்க வேண்டும்—ஆயுதங்களை யெல் லாம் தடை செய்ய வேண்டும் என்று தீர்மானம்போட்டு உல கத்துக்கு வேண்டுகோள் விடுத் திருக்கிறார்களென்றால் உங்கள் ஆயுதங்களை மட்டும் சும்மா விடுவார்கள் என்று நினைக் கிறீர்கள்?

[எல்லோரும் கவலை யோடு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள் கின்றனர்.]

★

வீமன் ★ அனுப்பிய யானை!

பாலசந்திரனைத் தொடர்ந்து, இரண்டாவதாக ஒன்றும் வானவெளிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது, ரஷ்யர்களால்.

இந்தச் சந்திரனுடன், இப்போது நாய் ஒன்றும், போயிருக்கிறது.

அதிசயம் என்கிறது, உலகம்! வியப்புக் கண்களுடன், ரஷ்ய விஞ்ஞானிகளைப் பார்க்கிறது!!

நாய்க்கு வேண்டிய ஆகாரம் அந்தச் சந்திரனில் வைக்கப்பட்டிருப்பதோடு, குறித்த நேரத்தில் ஒரு மணி அடிக்குமென்றும், அப்போது உணவை உட்கொள்ளும்படி அந்த நாய் பழக்கப்பட்டிருக்கிறதென்றும் கூறப்படுகிறது!!

இந்தச் சாதனையை அடுத்து சந்திரனுக்கு ஒரு டாங்கியை அனுப்பி அங்கிருந்து டெலிவிஷன் படங்கள் கிடைப்பது நம் சக்திக்கு எட்டியதாகிவிட்டதாக அங்கேரி விஞ்ஞானியொருவர் அறிவிக்கிறார்! ஒரு டாங்கி, பலடன் நிறையுள்ளது — அதையே சந்திரமண்டலத்துக்கு அனுப்ப இயலுமாம்.

சந்திரனுக்கே 'ராக்கெட்டை'ச் சுட்டாலும் ஆச்சரியமில்லை, ஏனெனில் ரஷ்யர்களின் விஞ்ஞான அறிவு வெகுவேகமாக வளர்ந்துகொண்டிருக்கிறது என்று அமெரிக்க விஞ்ஞானியொருவர், ஆச்சரியத்துடன் அறிவிக்கிறார்.

சந்திரனுக்கு பத்தே நாட்களில் போய்விட்டு வரலாம்! — என்று தெரிவிக்கப்படுகிறது. செயற்கை சந்திரன் தற்போது மணிக்கு 18,000 மைல் வீதம் சுற்றுகிறது. இந்த வேகத்தை 25,000 மைல்களாக அதிகரிக்க முடிந்தால், ஒரு செயற்கை கிரகம் சந்திரனுக்குப் பத்து நாட்களில் சென்றுவர முடியும் என்று மாஸ்கோ வானொலி பெருமிதத்துடன் அறிவித்துள்ளது.

சோவியத் யூனியன் செய்துள்ள ஆராய்ச்சிகளிலிருந்து சந்திரனுக்குச் சென்றுவிட்டு வரும் காலம், நெருங்கிக்கொண்டுள்ளது எனவும் அது தெரிவித்துள்ளது.

இவ்விதம் சந்திரனுக்குப் பிரயாணம் செய்வதில் பூமியிலிருந்து ஓரளவு உயரம் செல்வதற்கு மட்டும் ராக்கெட் எரிபொருள் இருந்தால் போதும். அதன் பிறகு பூமி, சந்திரன், சூரியன் ஆகியவைகளின் இழுப்புச் சக்தியைக் கொண்டு ராக்கெட் பறந்து செல்லும். சந்திரனை அணுக அணுக ராக்கெட்டின் வேகம் படிப்படியாகக் குறையும். சந்திரனை அடைந்த பிறகு ராக்கெட் வேகம் அதிகரிக்குமாதலால் அங்கிருந்து பூமிக்கு வரும், என்றும் ரஷ்ய விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனராம்.

உண்மையில், இந்தச் சாதனைகளைப் பற்றிக் கேட்கும் ஒவ்வொரு நாடும், விபரம் அறிய ஆவல் கொள்ளுகிறது! தாங்களும் இது போன்ற கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடிக்க வேண்டுமே என்று முனைகிறது!!

இந்தச் சமயத்தில், இந்திய உபகண்டத்திலிருந்து, குருஷேவுக்கு ஒரு விவசாயி, கடிதம் ஒன்று எழுதியுள்ளாராம். வாழ்த்து அனுப்பினாரோ ரஷ்யக் கம்யூனிஸ்டுப் பொதுச்செயலாளருக்கு எனக் கேட்பீர்கள்!! அல்ல, அல்ல. அவர் அனுப்பிய கடிதம் இதோ:

"வானவெளிக்குச் செயற்கைக் கிரகமொன்றை அனுப்புவதில், நீங்கள் இப்போதுதான் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். ஆனால் நாங்கள் மகாபாரத காலத்திலேயே இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறோம்!! பஞ்சபாண்டவர்களில் ஒருவரான வீமசேனர், வானவெளிக்கு ஒரு யானையைத் தூக்கி எறிந்தார். அந்த யானை இன்றும், வானவெளியிலிருக்கிறது."

நகைப்பீர்கள், நீங்கள்! ஆனால், இராஜ்கோட்டுக்கு அருகிலுள்ள சரப்தாத் எனும் கிராமத்தைச் சேர்ந்த அந்த விவசாயி, இப்படியொரு கடிதம் எழுதியிருக்கிறார்!! வீமன் அனுப்பிய யானை, வானவெளியில் இருப்பதாக எழுதியதோடிருக்கவில்லை, அவர்,

"ஐயா, குருஷேவ்!

உமக்கு ஒரு முக்கியமான விஷயத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். எங்கள் யானை, இன்னும் அங்கே சுற்றிக்கொண்டிருக்கிறது. இப்போது நீங்கள் புதிதாக சந்திரனை அனுப்பியிருக்கிறீர்கள். எங்கள் யானையுடன் உங்கள் சந்திரன் மோதாமலிருக்கும்படி உங்கள் விஞ்ஞானிகளைப் பார்த்துக்கொள்ளச் செய்யுங்கள். அதோடு எனது, 'ராம்! ராம்!!' வணக்கத்தையும் வீமசேனரின் யானைக்குத் தெரிவிக்குமாறு, விஞ்ஞானிகளுக்கு உத்தரவிடுங்கள்."

கடிதம் கண்டு, குருஷேவ் என்ன நினைப்பார்? சகாக்களிடம் காட்டிக் காட்டிச் சிரிப்பார்! இந்த விவசாயி மட்டுமல்ல, எத்தனை விற்பன்னர்கள் இன்னும் பேசுகிறார்கள்—தஞ்சை சரசுவதிமாலிலுள்ள நூல்கூடத்திலிருந்து சுவடிகளைத் திருடிச் சென்றுதான் மேல்நாட்டினர் விமானங்களையெல்லாம் செய்தார்கள் என்று!!

குருஷேவுக்கு, வீமன் அனுப்பிய யானையைப்பற்றியும் அதற்கு 'ராம்! ராம்!' வணக்கத்தைத் தெரிவிக்கும்படியும், இந்த விவசாயி எழுதியிருக்கிறார்.

இதோ ஒருவர், அந்த வீமன் கதையுள்ள மகாபாரதத்தை எழுதியவரைப்பற்றி, மிகவும் ஆனந்தத்துடன் பேசியிருக்கிறார்.

"கம்பீரமான பிராணி யானை! யானையைப் பார்த்துக்கொண்டே

யிருக்கலாம் போல் தோன்றுகிறது. ஆகவே, பிள்ளையாரும், யானையாகவே தோன்றுகிறார். சரீரம் பெரிதாயினும் சிறு பிராணியான மூஞ்சூறை வாகனமாகக்கொண்டிருக்கிறார்! வாகனத்தின் மேலிருந்தாலும், மூஞ்சூறுக்கு அவர் ஒரு நெட்டியைப் போலவே இருக்கிறார். யானைக்குக் கவுரவமும் அழகும் அளிப்பது அதன் தந்தம். விநாயகர், அதில் ஒரு தந்தத்தையொடித்துக்கொண்டு அதனால் எழுதியதே மகாபாரதம், ஆகும். அறிவுக்காக எத்தகைய தியாகத்தையும் செய்யவேண்டுமென்பதைக் காட்ட விநாயகர் தமது அருமையான தந்தத்தையை ஒடித்துப் பயன் படுத்தியிருக்கிறார்!"

கடிதம் எழுதிய விவசாயியை விட எல்லா வகையிலும் சிறப்புக்கும் கீர்த்திக்கும் ஆளானவர், இவர். லோக குருவென்று அழைக்கப்படுகிற சங்கராச்சாரியார் தான், இப்படிப் பேசியிருக்கிறார்! எதிரே பெரிய பெரிய மேதைகள், ஏடுநடத்துகிறவர்கள், நிபுணர்கள், அனைவரும் அமர்ந்துகொண்டு இந்த அரிய உபதேசத்திலுள்ள உண்மைகளை ரசித்து மகிழ்ந்திருக்கிறார்கள். இவர்கள், இதை இப்படிக் கேட்டு இன்புற்ற இதே சமயத்தில்தான், மேல் நாடுகளிலுள்ளவர்கள் புதுச் சந்திரனைப் பற்றியும், வான வெளிக்கு பல டன் எடையுள்ள 'டாங்கியை' அனுப்புவது குறித்தும் வாதிட்டுக்கொண்டிருந்திருக்கிறார்கள். வீமன் யானை அனுப்பியது—மகாபாரதத்தை யானைத் தந்தத்தால் எழுதியது--முதலியவைகளை, ஏதோ எதிரேயிருந்து கண்ணால் பார்த்தவர்கள்போல, இவர்கள் அளக்கிறார்கள். அதையும் ஒரு தடவையல்ல, இருதடவையல்ல, எத்தனை தடவை திருப்பித்திருப்பிச் சொன்னாலும், "ஆகா! ஆகா!! அருமை, அருமை" என்று கை தட்டி ரசிக்கிறார்கள், கனவான்கள்.

விஞ்ஞானம், வளருது, அங்கே. வீமன் அனுப்பிய யானையைப் பற்றிப் பேசி, 'அப்பளம் அவல் பொரி, சர்க்கரை தேன் பால்' என்று பஜனை பாடுகின்றனர், இங்கே.

என்று உருப்படுமோ, இந்நாடு!!

★

வாழ்க்கை

"வாழ்க்கை என்பது ஒரு அந்நிய மொழி, அதனை எல்லா மனிதர்களுமே தவறான முறையில்தான் உச்சரிக்கிறார்கள்" என்று மனம் வெதும்பிக் கூறுகிறான் கிரிஸ்டோபர்மார்லி என்ற மேதை. வாழ்க்கை ஓர் அரியகலை. அதனைச் சரிவரப் பயின்றவர் மிக மிகச் சொற்பம். அது ஒரு புதிர்; அதனை அறிந்துகொள்ள முடியாதவர்களுக்கு அது அச்சந் தருகிறது. புரிந்து கொண்டவர்கட்கு அதுவே இன்பத்தையும் தருகிறது.

வாழ்க்கையைப் பலர் கலையாக அல்ல; கடனாகக் கருதுகின்றனர். 'இன்பத்தையே அனுபவித்துக்கொண்டிருப்பது இனிப்பையே உண்டுகொண்டிருப்பதைப்போல; இடையிடையே காரத்தையும் உண்ணவேண்டும் என்ற மனப்பான்மை கொண்டவர்கள் மட்டுமே வாழ்க்கையைக் கலையாகக் கருத முடியும். "வாழ் நாள் முழுவதும் இன்பத்தை தவிர வேறு ஏதும் இல்லை என்றால் அது போன்ற வாழ்வை எந்த மனிதனும் சகித்துக்கொண்டிருக்க இயலாது; என்று அறிஞர் பெர்னட்ஷா கூறக் காரணம், வாழ்க்கையைக் கலையாக அவர் கருதியதுதான்.

வாழ்நாளில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் துன்பம் வந்த காலத்தில் மனமுடைந்து நிலை குலைந்துபோய் விடல் அறிவீனம். "மழைக்காலம் வந்துவிட்டதா? அப்புறம் என்ன கவலை? வசந்தம் வருவதற்கு இனி அதிக நாள் இல்லை. துன்பம் வந்துவிட்டதா? மிகவும் நல்லது; இன்பம் பிறக்க இனி அதிக நாள் இல்லை" என்று இஞ்சித்தும் கவலையின்றி புதுமைக் கவிஞன் ஷெல்லி பாடித் திரிந்ததை வாழ விரும்புவோர் ஒவ்வொருவரும் நினைவில் வைக்கவேண்டும்.

வாழ்க்கை என்ற வானில் ஒளியைப் பரப்புவது அறிவு என்ற கதிரவனே. அந்தக் கதிரவன் இல்லையேல், வாழ்வு வரண்ட பாலையாய், இருண்ட வெட்ட வெளியாய்க் காட்சியளிக்கும். எனவே வாழ்க்கையை நன்முறையில் நடத்திச் செல்ல விரும்புபவன் தன் அறிவை வளர்த்துக்கொண்டாகவேண்டும். மற்ற எல்லாவற்றையும் உருவாக்கி ஒழுங்குபடுத்துவது அறிவே. ஆகவே அறிவை நல்ல முறையில் உருவாக்கி ஒழுங்குபடுத்தி வைத்துக்கொள்வது நமது முதற் கடமை. மாந்தர் தம் அறிவினை வளர்க்க அறிஞர் பெருமக்கள் எத்தனையோ நூல்களை எழுதி வைத்துப் போயிருக்கின்றனர். மேதைகள் எழுதிவைத்த நூல்களின் வாயிலாக, அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எதிர்ப்பட்ட சிக்கல்களை எவ்வாறு தீர்த்தார்கள் என்பதைத் தான் அறிந்துகொண்டதாகக் கூறுகிறான் ராபர்ட்ஸந்நே என்ற கவிஞன்.

எள்ளவும் தவறும் செய்யாமல் வாழ்க்கை நடாத்தியோர் எவருமில்லை. தவறு செய்யாது நடாத்திய வாழ்க்கையும் இயந்திர வாழ்க்கையாக அமையுமேயன்றி உண்மையானதோர் வாழ்க்கையாகாது. நல்லவர்கள், தாம் செய்த தவறைத் தலைசிறந்ததெனக் கருதுகிறார்கள். 'இத் தவறைச் செய்ததால் இந்த இன்னலையடைந்தேன்' என்று அவர்கள் கூறி 'மறுமுறையும், இந்தத் தவறைச் செய்யேன். எனவே இந்த இன்னலையும் அடையேன்' என்று பெருமைப்பட்டுக்கொள்கிறார்கள். காந்தியடிகள் தாம் செய்த தவறுகளைத் தம் நூலில் தெள்ளத் தெளிய எடுத்துரைத்து அந்நூலுக்கு 'சத்திய சோதனை' என்றும் பெயரிட்டார் அன்றோ?

"வாழ்க்கை என்பது ஓர் அ… அதன் உருவும், வண்ணமும்

(10-ம் பக்கம் பார்க்க)

வங்கத்தில் இந்தி எதிர்ப்பு

—[ஒளி]—

தமிழகத்தில் தோன்றிய இந்தி எதிர்ப்பு உணர்ச்சி நாடெங்கனும் பரவிவருவது கண்கூடு. குறிப்பாக வடக்கிலும் எதிர்ப்புப் புயல் வீசத் தொடங்கிவிட்டது. இதுகாறும் வடவர்களில் சிலர் இந்தித் திணிப்பைப் ஒத்திபோடலாம் அல்லது தள்ளி வைக்கலாம் என்றே கூறி வந்தனர். தமிழகம் ஒன்றுதான் "இந்தியே வேண்டாம்" "எப்போதும் வேண்டாம்" என்ற ஒருமித்த குரல் எழுப்பி வந்தது. அதற்கு ஆயிரமாயிரம் சான்றுகளை, நடுநிலை உள்ளம் படைத்தோரும்; பெருநோக்கு கொண்டோரும் துணிந்து மறுக்க இயலா வகையில் முழங்கி வந்தனர். அது வீண்போகவில்லை. வங்க நாட்டு நல்லறிவாளர்களின் செவிகளில் விழுந்து உள்ளத்தையும் தொட்டிருக்கிறது. வங்கம் சீறி எழும் சிங்கக்கூட்டங்கள் உலவும் மாநிலம் என்பதை மத்திய அரசும் உணரும், நாட்டு மக்களும் அறிவர்.

ஒரு திங்களுக்கு முன் கல்கத்தாவில் "இந்திய மொழிகள் முன்னேற்றக் கழகம்" என்ற கழகம் ஒன்றை அரசியல் பற்றற்ற சிலர் அமைத்துள்ளார்கள். அக்கழகத்தின் எண்ணம், நோக்கம், வேலைத் திட்டம் ஆகியவைகள் அடங்கிய வெளியீடு ஒன்றின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

அமைப்பு:

இந்தக் கழகம் பெரும்பாலும் கல்கத்தா, விஸ்வபாரதி, சதாபூர் ஆகிய பல்கலைக் கழகங்களின் பேராசிரியர்கள், சில பத்திரிகைக்காரர்கள், அரசியல் தொடர்பில்லாத சில நல்லறிவாளர்கள் ஆகிய 27-பேர்கள் அடங்கிய குழுவினால் அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் சிலர் வருமாறு:— பேராசிரியர்கள் ஏ.எஸ்.ஏ. டட்டா (தத்துவம்) அம்லன் டட்டா (பொருளாதாரம்) டாக்டர் அதீந்தரநாத் போஸ் (சரித்திரம், தத்துவம்) புத்ததேவ போஸ் (இலக்கியம்), ஹிரண் குமார் சன்யால் (பொருளாதாரம்) ஏ. ஆ. பட்டாச்சார்யா (பொருளாதாரம்) டாக்டர் பி. ஸி. சக்ரவர்த்தி முதலியோர். மற்றும் பெண்கள் கல்லூரி முதல்வர் திருமதி பிரதிமா பௌஸ், மேற்கு வங்க மேறு கூட்டுச் செயலாளர்கள் திரு. நரேந்திர தேவ், திருமதி இராதாராணி தேவி ஆகியோர்.

கேர் அறிக்கை:

இந்த அறிக்கையின் முடிவை ஏற்றுக்கொண்டால், நாட்டில் இரு பெரிய சாதிகள் ஏற்படும். ஒன்று இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட உயர் சாதி. மற்றொன்று ஏனையவர்களடங்கிய கீழ்சாதி. முன்கூறிய உயர்ந்த சாதியே எல்லா வாய்ப்புகளையும் வசதிகளையும் பெற்று கீழ்சாதியினரை அழுத்திவிடுவார்கள்.

வட, தென் இந்தியாவிலுள்ள வளமுள்ள மற்ற மொழிகளின் வளர்ச்சி தடைப்படும். ஆட்சி மொழியாகப்போகிற கரிபோலி இந்தி தோன்றியதே 1850-தான். ஆனால் வடக்கிலுள்ள மற்றமொழிகள் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பும், தென்னக மொழிகள் அதற்கும் முன்பு தோன்றியவை. இந்தித் திணிப்பாளர்கள், வங்காளி, ஒரியா, அஸ்ஸாம், குசராத்தி; மராத்தி, மாபெரும் திராவிடமொழிகள் இவைகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்களின் மன எழுச்சியை மதிக்க மறுப்பதால் வரும் மனக்கசப்பு, கேடுகள் பல விளைய வழிகோலும்,

ஆங்கிலத்தின் இடத்தில் இந்தி வந்தால் விஞ்ஞான வளர்ச்சி தடைபட்டு, உலகத் தொடர்பும் பாதிக்கக்கூடும்.

நாட்டு ஒற்றுமைக்குத்தான் இந்தி என்று கருதினால், அதுவே நாட்டுப் பிரிவினைகளுக்குக் காரணமாக அமையலாம் என்பதையும் மனதில் கொள்ளவேண்டும்.

சில உண்மைகள்:

இந்தியாவில் என்றுமே ஒரே மொழி தேசிய மொழியாகவோ, ஆட்சி மொழியாகவோ இருந்ததில்லை, நாடெங்கும் பேசும் மொழியாக மட்டும்கூட ஒரு மொழி அமையவில்லை.

42 சதவிகிதம் இந்தி பேசும் மக்கள் என்று கூறுவது ஏமாற்று வித்தை. இந்தி, இந்துஸ்தானி, உருது, பஞ்சாபி ஆகிய நான்கு மொழிகளும் சேர்ந்துதான் இந்த 42 சதவிகிதம்.

ஆட்சிமொழி இந்தி என்று அரசியல் சட்டத்தில் ஏற்றியது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் அல்ல. நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளால்தான் ஏற்பட்டது.

எல்லா மக்களிடமிருந்தும் வாங்கும் வரிப்பணத்திலிருந்து இந்திக்காக மட்டும் பெரும் பணத்தை வாரியிறைத்துக் கொண்டிருக்கின்றனர் மத்திய அரசினர்.

ஒரே மொழி கொண்டுதான் ஆட்சி நடத்த இயலும் என்பதைப் பொய்ப்பிக்கிறது ஸ்விஸ், கானடா, பெல்ஜியம்.

கடந்த காலத்தில் ஆங்கிலத் திணிப்பு மற்ற மொழிகள் வளர்வதை அடியோடு தடைசெய்யவில்லை. ஆனால் இந்தி அதற்கு நேர் மாறான பாதையில் செலுத்தப்படுகிறது.

இந்தியை அறிந்துகொள்வதைப் பார்க்கிலும் ஆங்கிலத்தை அறிந்து கொள்வதினால் ஏற்படும் பயன் அதிகம்.

எண்ணங்கள்:

தாய்மொழிதான் மனிதனை வளர்க்கும். தன்னம்பிக்கை, மன எழுச்சி, சொல்திறன் இவைகள் தாய்மொழியில்தான் அமையும்.

அரசியல் சட்டத்தில் ஏற்றப்பட்டிருக்கிற மொழிகளில் இந்தியைத் தவிர ஏனைய மொழிகளைப் பிராந்திய மொழி என்று குறிப்பிட்டிருப்பது இழுக்கு.

தேசிய மொழி வேறு. ஆட்சி மொழி வேறு. முந்தியது இயற்கையாகவே ஏற்படுவது. பிந்தியது வேண்டுமென்றே ஏற்படுத்திக் கொள்வது.

உள்ளக் கருத்தை வெளிப்படுத்த உதவும் கருவிதான் மொழி என்பது அறிவீனம். மொழிதான் எண்ணத்தை, எழுச்சியை ஏற்றத்தை ஏற்படுத்த வல்லது. பண்பையும், பழக்கத்தையும் பக்குவப்படுத்துவது மொழி. மனித உயிருக்கு உயிரூட்ட வல்லது மொழி. அங்ஙனமிருக்க ஒரு மொழியின் வளர்ச்சியைத் தடைசெய்வது, அந்தமனித

இனத்தை அடக்கி, ஒடுக்கி முன்னேற முடியாமல் செய்வதாகும்.

கோரிக்கைகள்:

மத்திய அரசு அனைத்துமொழிகளையும் ஊக்குவிக்க வேண்டுமேயல்லாது குறிப்பிட்ட ஒரு மொழிக்கு மட்டும் ஏற்றம் தேடித்தர முயற்சிக்கக்கூடாது.

மத்திய அரசின் ஆட்சிமொழியாகவும், மாநிலங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ளும் மொழியாகவும் ஆங்கிலத்தையே உபயோகிக்கவேண்டும். வேண்டுமானால் இந்தியை உடன்வைத்துக் கொள்ளலாம்.

வேலைத் திட்டம்:

பொதுக் கூட்டங்கள் நடத்தியும், பிரசுரங்கள் வெளியிட்டும் நாட்டு மக்களுக்கு விழிப்பை யூட்டுதல். இந்த இயக்கத்தை மற்றப் பகுதிகளிலும் பரப்ப முயற்சித்தல். இது ஒரு அரசியல் கழகமல்ல. தாய்மொழிப் பற்றுள்ள யாரும் இதில் உறுப்பினராகிப் பணிபுரியலாம்.

* * *

மேலே கூறியுள்ள கழகத்தின் நோக்கம், கோரிக்கைகள் எல்லாம் தமிழ்நாட்டவர்களுக்குப்புதிதல்ல. இருந்தாலும் ஒரே கருத்துக்களை மற்றொரு மாநிலமும் எடுத்துக் கூறுவது மத்திய அரசை ஓரளவு விழுப்புறச்செய்யும். இந்தக்கழகம் அரசியலுக்கு அப்பாற்பட்டதாதலால், மக்களுக்கு உண்மையை எடுத்துக் கூறுவதோடு நின்றுவிடும். போராட்டங்களில் ஈடுபடாது. ஆனால் அதன் பயனாக விழித்தெழுந்த மக்களும், சிறந்த அரசியல் கட்சிகளும் தங்கள் கடமைகளைச் செவ்வனவே செய்தால் நாட்டு மக்கள் நலம் எய்துவர். வங்க மக்களும், வங்க அரசியல் கட்சிகளும் இந்திப் பிரச்சனையை விட்டுவிடமாட்டார்களென்றே தோன்றுகிறது.

உறங்கிக் கிடக்கும் வங்கச் சிங்கமும், தன்பலம் அறியாத் தமிழக யானையும், ஒளிந்திருக்கும் கேரளமும், ஆயாசத்திற்கு ஆட்பட்டிருக்கும் ஆந்திரமும் பதுங்கியிருக்கும் மராத்தியப் புலியும் ஒன்று சேர்ந்து எழுந்தால் உத்தரப் பிரதேச ஓநாய்கள், மத்தியப் பிரதேச குள்ளநரிகள் இவைகளின் கதி என்னவாகும் என்பதை காலம் அறிவிக்கும். ★

8-ம் பக்கத் தொடர்ச்சி

மாறிக்கொண்டேயிருக்கின்றன. எந்தக் கணத்திலும் அது ஒரே வகையான நிலையைப் பெற்றிருப்பதில்லை'' என்கிறான், டிண்டால் என்ற அறிஞன். கணத்துக்குக் கணம் மாறும் வாழ்க்கையைப் புரிந்துகொள்வதே சிரமம். அப்படியாயின் அதனை நடத்திச் செல்வது எவ்வளவு சிரமமானதாக இருக்கவேண்டும்.

எல்லாரும் வாழத்தான் வாழ்கின்றார்கள். ஆனால் அவர்களில் எத்தனை பேர் தங்கள் வாழ்க்கையை தொடர்ந்தாற்போல் அமைதியாக நடத்தியிருக்கிறார்கள்? எத்தனை பேர் தங்கள் வாழ்க்கையை எல்லோருக்கும் பயன்படும்படி நடத்தியிருக்கிறார்கள்? வாழ்க்கையின் பொருளை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. எனவே அவர்கள் வாழ்க்கையினைக் கலையாகக் கருதாமல் கடனாகக் கொள்கிறார்கள். சிலரோ வாழ்க்கையைக் கடனாகக் கூடக் கருதாமல் பயங்கரமானதாக முடிவுகட்டி தம் வாழ்க்கைக்கு வலுக்கட்டாயமாக முற்றுப் புள்ளி வைத்து விடுகிறார்கள்.

வாழ்க்கையில் எத்தனையோ தோல்விகளைக் காண நேரிடும். வாழ்க்கையைக் கடனாகக் கருதுவோர், தோல்விகள் ஒன்றன்பின் ஒன்றாக எதிர்ப்படவும், மனமுடைந்து போய், வாழ்நாளை வேண்டா வெறுப்பாக 'கடத்தியாக வேண்டுமே' என்ற கசப்பான எண்ணத்துடன் நடத்துவர். மாண்டேய்ன் வாழ்க்கையைக் கலையாகக் கருதியவன். இன்பத்தை எவ்வாறு சுவைத்தானோ, அதேபோல் துன்பத்தையும் சுவைத்தான். வெற்றிகளை எப்படிப் போற்றினானோ அதே போன்று தோல்விகளையும் போற்றினான்.

வெற்றிகளைவிட வெற்றிமிகுந்த தோல்விகளும் உள்ளன. சில சமயங்களில் வெற்றிகளைப் பெறுவதைவிட அத்தகைய தோல்விகளைப் பெறுவதே சாலச் சிறந்தது என்கிறான் அனுபவம் மிகுந்த அந்த சிந்தனையாளன்.

செருக்கு முன்னால் சென்றால் அவமானம் பின்தொடர்ந்து செல்லும் என்பதையும், சினம் என்பது சேர்ந்தாரைக் கொல்லி என்பதையும் வாழ விரும்புவோன் தெரிந்து கொள்ளவேண்டும். கோபம் என்பது ஒரு தற்காலிகப் பைத்தியக்காரத்தனம். ஆகவே கோபத்தை அடக்கு; இல்லையேல் உன்னை அது அடக்கிவிடும் என்றான் ஹொரேஸ் என்ற மேதை.

'வாழ்வதற்காகட்டும் சாவதற்காகட்டும் அஞ்சுவதற்கே நேரமில்லாதபடி பணிபுரிந்த வண்ணம் இருப்பதே சிறந்தபடி வாழ்வதாகும்' என்ற அமெரிக்க ஞானி எமர்சன் பொன்மொழியை நினைவில் கொள்ளவேண்டும். வாழ்வில் முன்னேற வேண்டுமாயின் தன்காலால் நடந்துசெல்ல வேண்டுமே யன்றி, இன்னொருவன் முதுகில் ஏறிச் செல்லலாகாது என்பதையும் அவன் மறத்தல் கூடாது.

"உண்பதற்காக வாழாதே; வாழ்வதற்கே உண்" என்று கூறிப்போனான், ஒரு அறிஞன். ஆனால் மனித சமுதாயத்தில் எத்தனைபேர் இந்த மனப்பான்மையுடன் வாழ்கின்றனர்?

'சிறிய செலவுகளைத் தடுப்பதில் தான் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் மிகப் பெரிய கப்பல்களையும், மிகச் சிறிய ஓட்டைகள் கவிழ்த்துவிடும்' என்னும் பிராங்களினின் பொன்மொழி. வாழ்க்கையை நன் முறையில் நடத்த விரும்புவோன் உள்ளத்தில் என்றென்றும் அழுத்தமாகப் பதிந்திருத்தல் வேண்டும். அத்துடன், 'வருமுன்னர்க்காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறுபோலக் கெடும்' என்ற நமது சிந்தனையாளன் சிந்திய சீரிய மொழியினையும் நினைவில் கொள்ளல்வேண்டும்.

நாம் வாழ்வதற்காக வந்தவர்கள். அத்துடன், வாழ்க்கையைக் கலையாகக் கருதவேண்டியவர்கள். இதனை மறப்பவர் கண்களுக்கு வாழ்க்கைப் பாதை பயங்கரப் பாதையாகத்தான் தென்படும்.

[மலர்மன்னன்]

இடமில்லை...!

சென்னையில் ஓரிடத்தில் கோதண்ட ராமய்யர் என்பாரும் அவரது இளம் மனைவியான மதுரம் என்பாரும் கடந்த 4-ந் தேதி தற்கொலை செய்துகொண்டு மாண்டனராம். மாண்ட தம்பதிகள் எழுதிவைத்திருந்த கடிதத்தில்) "என்னைப்போன்ற ஏழைகளுக்கு இவ்வுலகமில்லை," என்று குறிப்பிட்டிருந்தார்களாம். கணவனுடைய வயது, 38; மனைவியின் வயது 22. வசந்தம் வீசும் வாலிப வயதில், மரணத்தின் மடியிலே, கணவனும் மனைவியும் நிம்மதி காணலாம் என முடிவுகட்டினர். காரணம் வறுமை! அவர்கள் எழுதிவைத்துச் சென்ற கடிதத்தின் விபரத்தை அறியும்போது, கண்ணீர் பெருகாமற் போகாது!!

"என்னைப் போன்ற ஏழைகளுக்கு இந்த உலகத்தில் இடமில்லை."

"நானும் என் குழந்தைகளும் எப்படி வாழ்வோம்?"

"வேலை கிடைக்காமல் எத்தனை நாளைக்குத்தான் இப்படித் திண்டாடுவது? எத்தனை நாளைக்குத் தான் பட்டினி கிடந்து சாவது?"

இப்படி வாய்விட்டு அலறியும், ரயில் தண்டவாளங்களையும், கிணறுகளையும், மரக்கிளைகளையும் நாடியபடி, தற்கொலை செய்துகொண்டவர்களின் தொகை கடந்த ஆண்டில் மட்டும் 3,415 என்று சட்டசபையில் புள்ளி விவரம் தந்திருக்கிறார்கள்! பசிக் கொடுமையால் மட்டும் மாண்டவர்கள் 89 பேராம்!!

கேள்வி :- இந்தத் தற்கொலைக்குக் காரணம் என்ன? இதுபற்றி சர்க்கார் விபரம் கூறுமா?

அமைச் :- இயற்கை அழகும், செயற்கை அழகும், பொருளாதார முன்னேற்றமும் மிகுந்துள்ள ஸ்விட்சர்லாந்து போன்ற நாடுகளிலும் தற்கொலைகள் அதிகரித்து வருவதாகச் சொல்லுகிறார்கள்.

அமைச்சர், பதிலளிப்பதற்காக வெளிநாடுகளின் விபரங்களைத் தேடிப் பிடித்துத் தருகிறார்—என்னே அவர்தம் சிரத்தை என்று பாராட்டலாமே தவிர, சரியான பதில் என எவரும் கூறார்! வியாதி, காதலில் தோல்வி, வேறு காரணங்கள் இவைகளுக்காக வாழ்க்கையை முடித்துக்கொள்வோர் இருக்கிறார்கள். நாம் அவைகளைப் பற்றிய விளக்கங்களைக் கேட்கவில்லை. ஏன் பசியால் சாகிறார்கள் மக்கள்? வறுமையின் காரணமாக ஏன் பலர் சாகவேண்டும்? "என் போன்ற ஏழைகளுக்கு இவ்வுலகத்தில் வாழ இடமில்லை" என்று ஏன் கடிதம் எழுதிவைத்து தங்களைத் தாங்களே சாகடித்துக் கொண்டு மாளவேண்டும்?

மனிதாபிமானம் மிக்கோர், இந்நிலைமை, நாட்டில் நீடிப்பதற்காக வெட்கமும் வேதனையும் அடையத்தான் வேண்டும்.

நம் நாடு, வறண்ட பாலைவனமல்ல! வளம் கொஞ்சுகிறது, எங்கும்—உழைத்தால் பலன் காணக் கூடிய இடங்கள், ஏராளம்! ஏராளம்!! எனினும், பிழைக்க வழியில்லாமல், பலர் ஏன் பிணங்களாக வேண்டும்?

ஆள்வோர், அவசியம் கவனிக்க வேண்டிய பிரச்சினையாகும் இது.

★

சாதனை அங்கே!

கோதுமை வயல்களின் வழியே பல மணி நேரம் மோட்டார் காரில் சென்றுங்கூட வயலின் எல்லையைக் காண முடியவில்லை. அவ்வளவு பரந்திருக்கிறது கோதுமை வயல்! கன்னி நிலத்தில் மரகதக் கடல்போல விளங்கும் இந்த கோதுமை வயல்களைப்பற்றி நிறையப் படித்திருந்தேன்; ஆனால் அவற்றை நேரில் பார்த்தபோது என் உள்ளம் புளகாங்கிதமடைந்தது. உழைப்பின் இன்னிசையாய், மனித வல்லமையின் உருவகமாய்த் திகழ்கிறது இது. எங்கு பார்த்தாலும் உயிர்காக்கும் உணவு! இப்போது இப்படிப் பரந்து கிடக்கும் இந்நிலம் ஒரு போது வெறும் புல் தரையாகயிருந்ததாகும்!!

கன்னிநிலத்தை அபிவிருத்தி செய்யும் பணியில் சோவியத் யூனியனிலுள்ள எல்லா தேசிய இனங்களும் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன.

கடந்த காலத்தில் பல கிராம மக்கள் சேர்ந்து உழவேண்டிய அளவு கன்னி நிலத்தை ஒருவரே உழுதுவிட்டார்! அவர்பெயர் ருத்ஸ்கோய்! இங்கே வந்து குடியேறியிருக்கும் ஆறுலட்சம் பேர்களில் ஒவ்வொருவரும் கன்னி நிலத்தைப் பண்படுத்துவதில் ஒப்பற்ற பங்கை ஆற்றியிருக்கிறனர்.

இரண்டு ஆண்டுகளில் கஜாக்ஸ்தானில் ஐந்து கோடி ஏக்கர் நிலம் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. ஐந்து கோடி ஏக்கர் நிலம் இரண்டு லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்புக்கு சமமாகும். இதைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு ஒரு சிறிய உதாரணம் கூறுகிறேன். கிரேட் பிரிட்டனுடைய மொத்தப் பரப்பு 2,44,000 சதுர கிலோ மீட்டர்களாகும். கஜாக்ஸ்தானில் சாகுபடி செய்யப்பட்ட கன்னி நிலத்தின் பரப்பைக்காட்டிலும் இது கொஞ்சம்தான் அதிகமாகும்.

— "சோவியத் நாடு"

கேட்டீரா சேதி!

பூமியிலிருந்து, வானவெளிக்கு பாலசந்திரனைப்போல ஒரு மனிதன் அனுப்பப்பட்டு விடுகிருன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அங்கே, அவன் என்னென்ன சங்கடங்களுக்கு ஆளாவான் தெரியுமா? குடிக்கும் தண்ணீர் தொண்டைக்குள் இறங்காமல், நாக்கிலேயே தேங்கிவிடும். கண்களில் நீர் ததும்பினால் கீழே விழாது. மூச்சுவிட்ட காற்று முகத்தின் முன் மேகம்போல தங்கியிருக்கும். அதையே மீண்டும் உட்கொள்ள வேண்டியிருக்கும்!—என்று விஞ்ஞானிகள் கருதுகிருர்கள், பூமிக்கு இருக்கும் இழுக்கும் சக்தி, வான வெளியில் இல்லாமலிருப்பதே, இதற்குக் காரணமாம்! 2-ம் செயற்கைச் சந்திரனில் செல்லும் நாய் 900-மைல்களுக்கு மேல் உயிருடனிருக்கிறதென்றால் இந்தச் சங்கடங்களை தீர்த்தே ரஷ்ய விஞ்ஞானிகள் இச்சாதனையைச் செய்திருக்க வேண்டும் என்று கருதுகிருர்கள்.

*

வாழ்க்கை நடத்துவதற்குப் போதிய வருவாயில்லாத மக்கள் பிறரிடம் கடன் வாங்குவது சகஜம். ஆனால் ஒரு நாட்டை ஆண்ட சக்கரவர்த்திக்கு ஒரு சமயம் மிகச் சொற்ப தொகையைக் கடன் வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதென்றால், அது உண்மையிலேயே பெருவியப்புக்குரிய விஷயம் தானே!

இந்தியாவிலே பழைய டில்லியில் வசிக்கும் ஒரு வட்டிக் கடைக்காரர் குடும்பம், கடைசி மொகலாயச் சக்கரவர்த்தி பகதூர் ஷா எழுதிக்கொடுத்ததாகக் கூறப்படும் "பிராமிஸரி நோட்டு" ஒன்றை வைத்திருக்கிறது. பகதூர் ஷா 1857-ம் ஆண்டு மே மாதத்தில் இக்குடும்பத்தின் முன்னேரொருவரிடமிருந்து 325 ரூபா கடன் பெற்றதற்காக அந்தப் "பிராமிஸரி நோட்டை" எழுதிக்கொடுத்தாராம்.

மொகலாய சக்கரவர்த்திக்குப் பணம் கடன் கொடுத்ததாகக் கூறப்படும் பாங்கு 1913-ம் ஆண்டில் கலேக்கப்பட்டது. பகதூர் ஷா தமது துருப்புகள் சிலருக்குச் சம்பளம் வழங்குவதற்காகவே இக்கடனைப் பெற்ருராம்.

சக்கரவர்த்தி தாம் எழுதிக் கொடுத்த "பிராமிஸரி நோட்டை" மீட்கவில்லை. இப்பொழுது பாகிஸ்தானில் வசித்துக்கொண்டிருக்கும் அவருடைய சந்ததியினரான மிர்ஸா கைருதீன் என்பவர் 1000 ரூபாய் கொடுத்து இந்த "நோட்டை" மீட்க முன்வந்தாராம். ஆனால் பாங்கின் குடும்பத்துக்கு அந்த "நோட்டை"க் கொடுக்க விருப்பமில்லையாம்.

*

லண்டனில் நடைபெற்ற நாடகமொன்றைப் பார்க்க. சான்பிரான்ஸிஸ்கோவைச் சேர்ந்த தம்பதிகளிருவருக்கு ஆயிரம் பவுன் செலவாயிற்று.

கொவன்ட் கார்டனிலுள்ள ராயல் நாடக மாளிகையில் ஐந்து மணிநேரம் நடைபெற்ற "துரோஜர்கள்" என்னும் சங்கீத நாடகத்தைப் பார்ப்பதற்காக அட்டெயிலர் என்பவர் தமது மனைவியுடன் சான்பிராஸ்ஸிஸ்கோவில் இருந்து ஆருயிரம் மைல் தூரத்திலுள்ள லண்டனுக்கு விமானத்தில் போனர்.

67-வயதான அட்டெயிலர் அமெரிக்காவின் மேற்குக் கரையோரப் பகுதியிலே வர்த்தகம் செய்கிருர். அவருடைய வருடாந்தர வருமானம் 2150-பவுன். அவரைபபோலவே அவருடைய மனைவிக்கும் நாடகப் பைத்தியம் அதிகம்.

அட்டெயிலர் தமது மனைவியுடன் லண்டனுக்குப் போய் சேர்ந்ததும் பத்திரிகை நிருபர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, "ஒரு நாடகத்தைப் பார்ப்பதற்காக இவ்வளவு பணம் செலவழிக்கும் நீங்கள் அமெரிக்காவிலே ஒரு கோடீஸ்வரராக இருக்கவேண்டும்" என்று சொன்னர்களாம். அதற்கு அட்டெயிலர் "அப்படி என்னைப் பெரிய கோடீஸ்வரன் என்று நினைத்துவிடாதீர்கள். மனிதனுகப் பிறந்த ஒவ்வொருவனும் தனது வாழ்க்கையில் ஒரு முறை ஏதாவதொரு முட்டாள்தனமான காரியத்தைச் செய்ய வேண்டும்," என்று பதிலளித்தாராம்.

தம்பதிகளிருவரும் நாடக மாளிகையில் முன் வரிசையிலுள்ள சிறந்த ஆசனங்களில் அமர்ந்து, நாடகத்தை மனமாரக் கண்டு களித்தார்களாம். காட்சி முடிவில் அட்டெயிலர் "இந்த நாடகத்துக்குக் கொடுத்த ஒரு பென்னிகூட வீண்போகவில்லை" என்று சொன்னராம்.

*

மூளையில் சத்திர சிகிச்சை செய்வதில் நிபுணரான சோவியத் டாக்டரொருவர் பதினன்கு ஆண்டுகளாக ஒரு சோவியத் போர் வீரரின் மூளைச் சவ்வுகளில் தங்கியிருந்த துப்பாக்கிக் குண்டை அகற்றுவதில் வெற்றி பெற்ருராம்.

பி. கிளிம் சிங்கோ என்னும் அச் சோவியத் போர் வீரரின் தலையில் துப்பாக்கிக்குண்டு பாய்ந்தது. ஆனால் குண்டு கபாலத்தை ஊடுருவிக்கொண்டு வெளியே சென்றுவிட்டதென நம்பிய டாக்டர்கள் அவருடைய காயத்துக்கு மட்டும் மருந்து கட்டியனுப்பிவிட்டனர். ஆனால் அண்மையில் சிறிது காலமாகக் கிளிம் சிங்கோ கடும் தலைவலியால் பீடிக்கப்பட்டார். பழைய துப்பாக்கிக் குண்டு சிரசுக்குள் இருக்கக்கூடுமென்று சந்தேகித்த ஒரு டாக்டர் சத்திர சிகிச்சை செய்து. கிளீம் சிங்கோவின் மூளைச் சவ்வுகளிலிருந்த அக்குண்டை அகற்றிவிட்டார்.

சோவியத் போர்வீரர் சுகமடைந்து வருவதாகவும் அவர் வழக்கம்போல் வாழ்க்கை நடத்த முடியுமென்றும் இரண வைத்திய நிபுணர் கூறியுள்ளார்.

★

சளி பிடிப்பது, ஒரு வியாதியல்ல; உடலின் அசாதாரண நிலையின் அறிகுறி, அவ்வளவுதான். இது ஒரு ஆட்கொல்லியுமல்ல. ஆனால் இது உண்டாக்கும் இடைஞ்சல்களுக்கோ அளவில்லை. விடாப் பிடியாய் நம்மைப் பிடித்துக் கொண்டால், பின் படும் கஷ்டங்கள் எண்ணற்றவை. உடலின் வலிமையைக் குறைத்து, இன்னும் அநேக வியாதிகள் வருவதற்காக வாசலைத் திறந்து வைக்கும்.

கிரேக்க பாஷையில் "கட்டார்" என்ற பதத்திற்கு ஒழுகுதல் என்று அர்த்தம். இது எவ்வளவு பொருத்தமான பெயர் பாருங்கள்! "ம்யூக்கஸ்" என்று சொல்லப்படும் சளி உடலின் உட்பாதைகளிலிருந்து கசிந்து வழிகிறது. அப்போது சளிச் சவ்வில் வீக்கம் ஏற்படலாம். இவ்வீக்கம் மூக்கில் ஏற்பட்டால் 'ஜலதோஷம்' பிடித்திருக்கிறது என்று சொல்லுகிறோம். தொண்டை பாதிக்கப்பட்டிருந்தால், இருமல் உண்டாகிறது. குடலாய் இருக்குமானால், குடல் அழற்சி ஏற்படுகிறது. உறுப்பு எதுவாயிருந்தாலும், காரணத்தைக் கண்டுபிடித்தால் தான் தகுதியான கிகிச்சை அனுசரிக்க முடியும்- மற்ற வியாதிகளின் காரணமாக வந்த அனுபந்தமாகக்கூடச் சளி பிடிக்கலாம். ஆனால் குளிர் காலத்தில் சளி பிடித்தால்; சளிச் சவ்வும், அதன் உடன் தோழனாகிய சர்மமும் தம் வேலையைச் சரிவரச் செய்யவில்லை என்பது தெளிவு. வைத்திய முறைப்படி இவ்விரு உறுப்புகளும் ஒன்றே. உடலை வியாதிகளினின்றும், அசுத்தங்களினின்றும் காப்பாற்றும் பொறுப்பு இவைகளுடையது, இரண்டும் சேர்ந்தே உடலின் சூட்டை ஒரே சிராய்வைத்துக்கொள்ளுகின்றன. நச்சுப் பொருள்கள் உடலிலிருந்து வெளியேற்றப்படுவதும் இவற்றின் மூலமாய்த்தான்.

சீரணப் பாதை, வாயில் ஆரம்பித்து, ஆசனத்தில் முடிவடைகிறது. உணவ இவ்வழியின் மூலமாய் இலகுவில் செல்வதற்கு, இப்பாதை எப்பொழுதும் ஈரமாக வைக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லவா? அங்கு இருக்கும் சளிச் சவ்வு இவ்வேலையைச் செய்கிறது. மேலும் நாசியினுள் இருக்கும் சளிச்சவ்வு உள்ளே, இழுக்கப்படும் காற்றிற்குத் தகுந்த ஈரத்தையும் கொடுத்து உதவுகிறது.

மேற்சொன்ன அலுவல்கள் எல்லாம் திறம்பட நடத்தப்பட வேண்டுமானால், சர்மமும் சளிச் சவ்வும் சீருடன் ஒத்துழைக்க வேண்டும். சூரிய வெளிச்சமும் காற்றும் சர்மத்தின் மேல் படாமல், நமது நவ நாகரீக உடைகள் தடுத்து விடுகின்றன. எனவே இங்கு இரத்த ஓட்டம் குறைந்து சர்மத்தின் சக்தி குறைவுபடுகிறது. அப்படியானால் இது செய்யவேண்டிய சில வேலைகளைச் சளிச் சவ்வு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது. தனது சக்திக்கு மேல் உழைப்பில் ஈடுபட்டிருக்கும் சளிச் சவ்வு, குளிர்ந்த காற்று, தூசி முதலியவற்றால் அழற்றப்படும் போதும், குடலில் ஜீரணிக்காத உணவு தங்கித் தாமதிக்கும்போதும், வீக்கம் அடைகிறது.

இந்நிலை நீடிக்குமானால், சளிச் சவ்வு இன்னும் கொஞ்சம் சளியை வெளியே தள்ளுகிறது. இது விரைவில் அப்புறப்படுத்தப் படாததால் உறைந்து, கட்டிச் சளியாக மாறுகிறது. இதை இருமி இருமி வெளியே தள்ளப் பிரயாசைப்படுகிறோம். சில சமயங்களில் இந்நிகழ்ச்சியில் தொண்டை வறண்டு போவதுமுண்டு,

ஜலதோஷம் பிடித்துவிட்டது என்றால் என்ன அர்த்தம்? (1) சர்மம் நிர்விசாரமாக இருக்கிறது. (2) இரத்த ஓட்டம் சுதாரிப்பாக இல்லை, (3) உட்கொள்ளும் உணவு பொருத்தமில்லை. இத்துடன் சீதோஷ்ண நிலையும் சீர் கெட்டிருந்தால், நாம் படுகிற கஷ்டம் கொஞ்சம் நஞ்சம் அல்ல.

சளி பிடிப்பதைத் தடுப்பது ஒரு நாளில் ஆகிற காரியமல்ல. திட்டம் போட்டு, எதிர்த்துப் போராடி வந்தால்தான், முடியும்.

இதன் வாதனையை ஓரளவு போக்க சில சாதனங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

பூரண சுகம் அடைய வாரக் கணக்கில் கட்டுப்பாடான சிகிச்சை செய்யவேண்டியது அவசியம். முதலாவது சர்மத்திற்குப் புத்துயிர் ஊட்டுங்கள். முரட்டுத் துவாலை அல்லது துணியைக் கொண்டு காலையிலும் மாலையிலும் நன்றாகத் தேய்த்து விடுங்கள். இது இரத்த ஓட்டத்தைத் துரிதப் படுத்தும். ஒவ்வொரு நாளும் அரை மணி நேரமாவது திறந்த வெளியில் தேகாப்பியாசம் எடுத்துக் கொள்ளுங்கள். காற்றும் வெய்யிலும் சர்மத்தின் மேல் படட்டும். "அல்ட்ரா வயலட் சூரிய ஒளி" சிகிச்சை செய்வது மிகுந்த பலனை அளிக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. அழுத்தமற்ற, இறுக்கமில்லா ஆடைகளை அணிவது அவசியம். இப்படி இருந்தால் தானே, சர்மம் சுவாசிக்க முடியும்?

சளி, பிடித்திருந்தால், அநேகருக்குக் கால் குளிர்ந்திருக்கும். இதுவே திருப்தியற்ற இரத்த ஓட்டத்திற்கு உதாரணம். அப்படிப்பட்டவர்கள் ஒரு நிமிஷத்

திற்கு பாதத்தை உஷ்ண நீரிலும், பிறகு பனி போல் குளிர்ந்த நீரிலும் மாற்றி மாற்றி வைத்து எடுக்கவேண்டும். இப்படி ஐந்து, ஆறு தடவை செய்தவுடன், பாதத்தை நன்ருகத் துடைத்து விட்டு, கொஞ்சம் தேங்காய் எண்ணெயைப் பூசிவிட வேண்டும். இந்தச் சிகிச்சையின் விளைவால், இரத்த ஓட்டம் துரிதப்பட்டு, உடல் தகதகவென்று சுக நிலை அடையும்.

சில உணவுகள் இயற்கையாகவே சளியை உண்டுபண்ணக் கூடிய தன்மை வாய்ந்தவை. இப்படிப்பட்ட உணவு வகைகளையே நாம் உபயோகித்து வந்தால், எப்படி சளிக்கு ஒரு முடிவுகட்ட முடியும்? பால், வெண்ணெய், தயிர் முதலியவற்றை விட்டுவிட வேண்டும். கொழுப்புப் பதார்த்தங்களும், எண்ணெயில் பொரித்தவைகளும் கூடாது. புது ரொட்டி, சாக்லெட்டு, டாபி முதலியவைகளைத் தள்ளிவைத்துவிட வேண்டும். கொக்கோ, டீ, காபி முதலிய பானங்கள் கிட்டவும் நெருங்கக் கூடாது. ஆனுல் பழ வகைகளையும், காய் கறிகளையும் தாராளமாய் உபயோகிக்கலாம்.

வயிறு புடைக்க சாப்பிட வேண்டுமென்ற அவசியமே இல்லை. ஊக்கம் ஊட்டும் உணவாக இருக்கவேண்டும். செல்களைக் கட்டி, அவைகளுக்கு வலு ஊட்டக் கூடிய அளவுக்கு உணவுச் சத்து அமைந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட உணவு, சளியை வளர்க்காது, சளியின் ஆக்கிரமிப்பிலிருந்து உடலைக் காக்கக் கூடியதாயிருக்கும்.

★

இட மாற்றம்

புதுவையில், தோழர் கே. ஏ. ஜலீல் நெ. 25 துய்ப்ளேக்ஸ் வீதி என்ற முகவரியில் விற்கப்பட்டு வந்த இயக்க இதழ்கள் யாவும், இந்த நவம்பர் முதல் கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கும்.

ச. சிவப்பிரகாசம்
c/o கண்ணன் சவுண்டு சர்வீஸ்,
90, காந்தி வீதி, புதுவை

நூல் அரங்கு

பட்டத்தரசி

தமிழ் இலக்கியக் கடலுள் ஆழ்ந்து கிடக்கும் சுவை மிக்க வரலாறுகள் எத்துணையோ பலவாகும். அவற்றுள் சிலவற்றின்மீது மறதி படிந்துள்ளது; சிலவற்றின்மீது சமயம் எனும் மாசு படிந்துள்ளது, புராணச் சாயல் சிலவற்றை ஒளி மங்கச் செய்துள்ளன.

சங்ககாலத்தில் வாழ்ந்த தமிழரின் நல்ல பண்புகளையும் நெறிகளையும் எடுத்தியம்பும் செய்திகள் பலவற்றை நாம் அறிவோம். அவற்றுள் ஒன்று 'நெற்றிக் கண்ணைக் காட்டினுலும்' குற்றம் குற்றமே என்ற நக்கீரன் கதையாகும்.

தமிழ்ப் புலவர்களுக்கு இயற்கையாக உள்ள நெஞ்சு உரத்தினை அந்தக் கதை காலாகாலமாக நமக்கு உணர்த்திவருகின்றது. அதில் வரும் 'திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்' புலவனைத் தன் உருவம் காட்டி வீழ்த்திவிட நினைத்துத் தோற்றது தெற்றென விளங்குகின்றது.

அந்தக் கதையை கவிஞர் சுரதா அவர்கள், புதிய கோணத்திலே நின்று பார்த்து 'இப்படி இருந்திருக்கும்' என்று தாம் எண்ணுவதனை அழகிய காவியமாக்கித் தந்திருக்கின்ருர், பட்டத்தரசி வடிவில். பாண்டிய மன்னன் தன் பட்டத்தரசியின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா இல்லையா என்று புலவர்களை ஐயம் கேட்டு ஆயிரம் கழஞ்சு பொன் அந்த ஐயம் தீர்ப்போர்க்குத். தருவதாக செய்திவிடுத்து, இறைவன் தருமி என்ற பார்ப்பனர்க்குக் கவிதை ஒன்றை ஆக்கித் தந்ததாகவும், பின்னர் கீரன் அந்தக் கவியில் குறை கண்டதும் 'நெற்றிக் கண்ணைக் காட்டி'யதும் பழைய கதையாகும்.

'சுரதா'வின் படைப்பில் இறைவன் ஆண்டவனுக இல்லாமல், பார்ப்பனனுகவும், தருமி அவன் மகனுகவும் மாறியுள்ளனர். கீரன் பாடலில் குறை சொன்னதும் அந்தப் பாடல் புனைந்த 'பரமசிவன்' கவிஞர்போல் வேடம் இட்டுவந்து வாதத்தில் கீரனிடம் தோற்று ஓடுவதாகவும் புதிய முறையில் புனைந்துள்ளார்.

கதையை மாற்றி யமைத்திருக்கும் இந்த முயற்சியை 'பழம் புலவர்கள்' வரவேற்பார்களா என்பது ஐயமே. அப்படிப்பட்டவர்களின் சீற்றத்தை ஆசிரியரே முன்னுரையில்,

குறுந்தொகைப் பாடல்
திருவிளை யாடலாய்
ஆகும்போது; அந்தச் செய்யுள்
பட்டத் தரசி ஆனுல் என்ன?

என்று, கேட்பதன் வாயிலாக அடக்கி விடுகின்ருர்.

கதையைத் தாங்கிவரும் கவிதை சுவைமிக்க காவியமாகத் திகழுகின்றது. நடையின் வேகம் சொற்களின் பிணைப்பு இவையெல்லாம் நல்ல முறையில் அமைந்து நூலை எழில் உள்ளதாக ஆக்கியுள்ளது. கருத்தாழம் மிக்க வரிகள் இங்கும் அங்குமாக இடையிடையே பளிச்சிட்டு ஒளிவீசுகின்றன.

மதம் வேண்டும் என்கின்ருர்;
மதமா வேண்டும்?
மதிவேண்டும்; மதிவளர்க்கும்
கல்வி வேண்டும்.

*

வேள்வியிலே வளர்ந்தவர்கள்,
பழமையான
வேதத்தைப் போற்றிடுவர்,
ஆனுல் நாமோ
கேள்வியிலே வளர்ந்தவர்கள்;
நமக்கோ நல்ல
கேள்விகளே பலாச்சுளைகளே;
பருகும் செந்தேன்

*

இவை போல்வனவும், இன்னும்,
'கொடுத்துச் சிவந்த குமணன்
கைபோல மேற்கு வான்
சிவந்து விளங்குகின்றது.
'பவனப் பெட்டியில் வைத்த முத்துச் சரம்' என்றெல்லாம் உவமையிலும் உயிரும் புதுமையும் காணக் கிடக்கின்றது.

பழைய கதையில் தருமியின் பாடலில் குறைகண்டான் கீரன், தருமிக்குப் பொற்கிழி அளிக்கப் பெறவில்லை என்று மட்டுமே காணப்படுகின்றது. பின்னர் அந்தக் கிழியைப் பெற்றவர் யார் என்பது தெரியவில்லை. ஆனுல் 'சுரதா'வின் புதிய காவியத்தில் பெண்ணொருத்தி அந்தப் பெருஞ்சபையில் வந்து பாடல் சொல்லி அப்பரிசைப் பெற்றதாகப் புனைந்துள்ளார். பின்னர் அந்த ஆரணங்கு சங்கத்தில் பிற புலவர்களுடன் அமர்ந்து தமிழ் வளர்த்தாள் எனவும் கூறுகின்ருர்.

ஆசிரியரின் முயற்சியும் உணர்ச்சியும் பாராட்டப்பட வேண்டியவை. மொழி வளமும் தடையில்லா ஓட்டமும், கருத்துச் செறிவும், உவமை நயமும்மிக்க இதைப்போன்ற கவிதை நூல்களை சுரதாவிடமிருந்து நாடு எதிர்பார்க்கின்றது.

'பட்டத் தரசி'—ஆசிரியர்: கவிஞர் சுரதா: வெளியிட்டோர்: முத்து நூலகம், 8-G., பைக்ராப்ட்ஸ் ரோட், சென்னை-5. விலை; அணு 12.

மணி ஒலித்தது, ஆனால்....!

[சட்டசபையில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தி. மு. க. எக்கோணத்திலிருந்து கவனித்தது, என்பது குறித்து 3—11—57 வெளிவந்த நமது ஆங்கில ஏடாம் 'ஹோம் லேண்டு' தலையங்கத்தின் கருத்துரை.]

*

துப்பாக்கிப் பிரயோகங்கள் குறித்தும், படுகொலைக்கு ஆளாகி மக்கள் மாண்டது பற்றியும், இந்த நிலைமையைச் சமாளிக்க அதிகாரத்திலமர்ந்திருப்போர் என்ன செய்தார்கள் என்றும் விவாதிப்பதென்பது எப்போதுமே வேதனையானதாகும். எண்ணிக்கைப்பலமும் கையிலிருப்பதால் இதுபோன்ற விவாதத்திலிருந்து, 'தப்பிவிட்டது' என்பது ஆட்சிக்கு ஒரு கீர்த்தியல்ல! அருவருக்கத்தக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. வகுப்பு வேற்றுமை, சாதிச் சண்டைகள் மூலம் ஏற்பட்ட 'சாவுகளை' துப்பாக்கி தூக்கிக் குண்டுகளைப் பொழிந்து சமாளிக்க முடிந்தது என்பது, ஆட்சிக்கு ஒரு சிறப்பல்ல. 'பார்த்தீரோ எம் கீர்த்தியை' என்று பறைசாற்றிக் கொள்ளுமுன் எந்த அரசும் சற்று யோசிக்கவே செய்யும்!! ஆனால், சென்னை அரசு, குதூகலமடையும் குழந்தைகளைப் போல, இத்தாப்பு அடைகிறார்கள். இது கண்டு, உண்மையில் நாம், திகைப்படைகிறோம்.

அடிதடிக்கு ஆளாகியும், துப்பாக்கிப் பிரயோகங்கள் மூலமும் நாற்பதுக்கு மேற்பட்டோர் பிணமானதாக எல்லோரும் சொல்லுகிறார்கள். மூவாயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் சாம்பலாக்கப்பட்டன! முதுகுளத்தூர் வட்டாரமே, பயத்தாலும், பரிதாபத்தாலும், சூழப்பட்டிருந்திருக்கிறது. குடும்பங்கள், அழிந்தன! சொத்துக்கள் நாசமாயின! மனிதத் தன்மையே, மறைந்து போயிருக்கிறது, அங்கே. இவைகளையெல்லாம், தங்களுடைய திறமைக்கோர் எடுத்துக்காட்டு என்று ஆட்சியிலிருப்போர், பட்டியலிட்டுக் காட்டமுடியாது. திறமை மிக்க ஆட்சிக்கோர் சின்னம் என்று சொல்லவும் முடியாது. மக்கள் மத்தியில் தங்களுக்கிருக்கும் செல்வாக்கைப் பற்றி இன்று ஆட்சியிலமர்ந்திருப்போர் வானளாவப் பேசுகிறார்கள் — "வகுப்புத் துவேஷத்தை வேரறுத்துவிட்டோம் தெரியுமா? எமது முன்சாக்கிரதையாலும், ஓய்வு ஒழிச்சலில்லாத சேவையாலும், 'ஆயிரமுண்டிங்கு சாதி' என்றாலும் அமைதியை நிலைநாட்டிவிட்டோம் தெரியுமோ?" என்று மேடையிலிருந்து கர்ச்சிக்கிறார்கள்! தகராறு செய்யும் சக்திகளை எமது கைக்குள் வைத்துக்கொள்ளும் 'விசேஷ அறிவு' எமக்குண்டு, புலியும் ஆடும் அருகருகே இருக்கும், எங்கள்பார்வை பட்டால் போதும் சீறும் புலியும் தன்குணம் மறந்து ஆட்டைப்போல் சாதுவாகிவிடும்— எம்மைத் தவிர யாரால் இயலும் இது? சபர்மதியில் வாழ்ந்த சாந்தசீலரின் வழி வழி வந்தவர்களன்றோ நாங்கள்!" என்று முழக்குகிறார்கள்.

எனினும், அவர்களது ஆட்சிக் காலத்திலே, வெட்டிக்கொண்டு மாண்டிருக்கிறார்கள் பலர், காட்டுமிராண்டித் தனமான அடிதடிகள் நடந்திருக்கின்றன, கொள்ளையும் கொலையும் சாதாரணமாகியிருக்கிறது, பெண்களின் கற்புக்குக் கூட ஆபத்து நேர்ந்திருக்கிறது. 'ஐயோ, இப்படி நடந்துவிட்டதே' என்கிற வெட்கம் காரணமாக இல்லாவிட்டாலும், அனுதாபம் காரணமாகவாவது தலையைத் தொங்கப்போட்டுக் கொள்ள வேண்டிய இவர்கள், தங்கள் கீர்த்திக்குக் கிடைத்த இன்னொரு 'விருது' என்றுகாட்டிக்கொண்டு, 'பார்த்தீர்களா! நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம்' என்று மக்கள் மன்றத்துக்கு அறிவிக்கிறார்கள்.

சட்டசபையில் கொண்டுவரப்பட்ட 'நம்பிக்கையில்லாத் தீர்மானம்' பெரும்பான்மை ஓட்டுகள் மூலம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது — இந்தக் காரிய சாதனை செய்தவர், முதல்வரின் பாராட்டுதலையோ, புன்சிரிப்பையோ எதிர்பார்க்கக்கூடும். 'ரோடுரோலரை'ப் போல பெருத்த மெஜாரிடியை வைத்திருக்கும் கட்சி, இப்படி வெற்றிபெற்றது, ஆச்சரியமானதல்ல. ஆனால், அவர்கள், உண்மையாகவே நல்ல ஜனநாயகவாதிகளானால் இந்த 'தீர்ப்போடு' திருப்தி பெற்றுவிடக்கூடாது — எதையும் வெல்வோம் என்பது ஜனநாயக அரசியலில் அழிவை நோக்கிச் செல்லுவதாகும்! ஆகவே, இவர்கள், மக்களின் தீர்ப்புக்கு விரைந்திருக்கவேண்டும். நடைபெற்ற நிகழ்ச்சிகள் யாவும் பற்றி, ஒரு நீதி மன்ற விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கவேண்டும். அப்போது, விசாரணை அதிகாரியின் உதவி தேவைப்பட்டிருக்காது. அந்த விசாரணையும், பொருத்தமற்ற நேரத்தில், நடைபெறச் செய்யப்பட்டதாகும். நிலைமை அமைதியான பிறகு, ஒரு நீதிமன்ற விசாரணைக்கு ஏற்பாடு செய்வதுதான், ஒரு அரசு தனது கடமையையும் அடக்கத்தையும் காட்டிக்கொள்ளும் முறையாகும். சட்டசபைக்குள்ளே 'ஆமாம்' போடுபவர்கள் எவ்வளவுபேரிருந்தாலும், வெளியே கேட்கும் அதிருப்தியை அகற்றிவிட முடியாது.

சட்டசபையில் ஒரு உறுப்பினர் சொன்னதுபோல, ஆளும் அரசு, ஐயத்துக்கு ஆட்படாததாக விளங்கவேண்டும். விவேகம்தான் முக்கியம். அதன் மூலம்தான், எதையும் நிரூபிக்கவேண்டும். இதனை வலியுறுத்தி வற்புறுத்துவதற்காகத்தான் சட்டசபையிலுள்ள தி. மு. க. உறுப்பினர்கள், நான்கு நாட்கள் நடைபெற்ற இந்தப் பரிதாபகரமான சம்பவங்களைப் பற்றிய விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டார்கள். இதுபோன்ற விவாதங்களின் நோக்கம், தூய இருதயமும், சுத்த

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண் … { அலுவலகம் இல்லம்

மான மனநிலையும் ஏற்படவேண்டும் என்பதுதான். ஆட்சியிலமர்ந்திருப்போர், இதுபோன்ற விவாதங்களின்போது, 'கறைபடாத கரங்களை'க் காட்டிக்கொள்வதுதான், கடமையாகும். கட்சிக் கட்டளைக்குட்பட்டு, கைதூக்கிவிடுவதன் மூலமல்ல, நீதி மன்ற விசாரணைக்கு உத்தரவிடுவதன் மூலமே, இதனைக்காட்டிக்கொள்ள இயலும்.

எண்ணத்திலும் செயலிலும் தமக்குள்ள 'தூய்மை'யை வெளிப்படுத்திக்கொள்ளும் நல்வாய்ப்பாக இதனைக் கருதாமல், 'சவால்' போல எடுத்துக்கொண்டு, முரசு கொட்டி, தன் பக்க பலங்களைத் திரட்டி, சபையில் பெருத்த மெஜாரிடியிருப்பதென்பதால் அரசு தனது 'வெற்றி'யை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறது. ஓட்டெடுப்பின் போது, தி. மு. க. கலந்துகொள்ளவில்லை. காரணம், பயன் ஏற்படப் போவதில்லை என்பதால் மட்டுமல்ல, பிரச்சினை இந்தக் கட்டத்தில் சிக்கலாக்கப்பட்டுவிட்டது என்பதுதான். இதுபற்றி சபையில் தரப்பட்ட விளக்கத்தை வேறிடத்தில் தந்துள்ளோம். ஏன் தி. மு. க. இந்நடவடிக்கையை மேற்கொண்டது என்பதற்கான நியாயத்தை எவரும் உணரலாம். நம்பிக்கையிலாத் தீர்மானத்தைக் கொண்டுவரக் காரணமாயிருந்தவர்கள், 'தவறான பாதையில்' சென்றுவிட்டார்கள் என்பதுதான் தி. மு. க. - வின் கருத்தாகும். தங்களது பலத்தைக் காட்டிக்கொள்ள அரசினருக்கு நல்லதோர் சந்தர்ப்பம் அளிப்பதாக அமைந்துவிட்டது, இது! உண்மையில், ஆள்வோர், உள்ளுக்குள் மனம்பூரித்தே போயிருப்பார்கள் !!

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் கொண்டுவருவதற்கு முன்பு, "சட்டசபையின் வேலை முறைக் கமிட்டி"யில் எல்லாக் கட்சித் தலைவர்களும் விவாதித்தார்கள். இதுபற்றி சபையில் விவாதிப்பதென்றும், சட்டசபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம்பற்றி வற்புறுத்தக்கூடாதென்றும், அங்கே முடிவு செய்யப்பட்டது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர இருந்தவர் சோஷியலிஸ்டு கட்சியைச் சேர்ந்த தோழர் நல்லசிவமாகும்! இதுபற்றித்தான் வேலை முறைக் கமிட்டியில், ஆலோசித்து, இதை வலியுறுத்துவதில்லை யென்கிற ஏகமனதான முடிவு செய்யப்பட்டது. கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த தோழர் கலியாணசுந்தரம், அப்போது அங்கு இல்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு அதுவே ஒரு காரணமாகக் காட்டப்பட்டது. இவர்களது "செயற்கைச்சந்திரன்" கிளம்பியதும், எல்லோரது கண்களும், அந்தப் பக்கமே திரும்பலாயின. தெரிந்து செய்யப்பட்ட தவறாகும், இது.

நான்கு நாட்களும் நடைபெற்ற விவாதம், பாதை மாறலாயிற்று. எதிர்க் கட்சிகளிலே ஒத்தகருத்து இல்லாததாலா அல்லது வேண்டுமென்றேதானா, என்பதை நாமறியோம். ஆனால், தாக்குதல், குறி மாறலாயிற்று. விவாதத்தின் தரமும், நோக்கமும், குறைந்தது.

'நம்பிக்கையில்லாத் தீர்மானம்' வற்புறுத்தப்பட்டு, எதிர்க் கட்சிகள், ஆளும் கட்சியினர் 'கித்தாப்பு' தேடிக்கொள்ளும், சந்தர்ப்பத்தை வழங்கிவிட்டன !!

அரசியலில், இது ஒரு சாதாரண கட்டம்தான். ஏன் அரசாங்கம் தன் பொறுப்பை உதறித் தள்ளியது-சட்டசபையில், தமது அரசினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி நியாய வாதங்களையும், விளக்கங்களையும், சான்றுகளையும் கூடச் சமர்ப்பித்தாரே சட்டசபைக் கட்சித் தலைவர், அப்படியிருக்கும்போது ஏன் நீதிமன்ற விசாரணை நடத்தத் தயங்கவேண்டும், என்று ஆச்சரியப்பட்டவர்களாக, மக்கள் இருக்கிறார்கள். ஒருவேளை, இப்படியொரு நீதி மன்ற விசாரணை நடத்த இது சமயமல்லவென்று கருதினால் இன்னும் கொஞ்சக்காலம்சென்று அப்படியொரு விசாரணை நடத் தப்படும் என்கிற நம்பிக்கையை யாவது, மக்களுக்குத் தந்தா லென்ன.

மணி அடிக்கப்பட்டது; வெற்றியும் குறிக்கப்பட்டாகிவிட்டது ஆனால், வடு ஆறவில்லை. உடலில் ஏற்பட்ட வடு மட்டுமல்ல. உள் ளத்திலும் உண்டானவை ஆறவில்லை. இன்னும் நேரமிருக்கிறது, அர யல் நெறியைக் காட்டிக்கொள்ள அரசினர் முன் வந்து அறிவிக்க வேண்டும். "இதைச் செய் அதைச் செய்," என்று எதிர் கட்சியினர் என்ன நமக்கு 'கட் டளை' பிறப்பிப்பது என்று அவ கள் கருதக்கூடும். ஆனால், மக் ளின் குரலுக்காவது மதிப்பளிக் லாமல்லவா? அந்த எஜமான களுக்குப் பணியுங்கள், எப்படிய வது அவர்களைப் புரிந்துகொள் முயலுங்கள், என்று நாம் கூறு கிறோம்.

தண்டு தூக்கியே சட்டத்தை நிலைநாட்டுவதென்பது கூடாத மக்களின் நம்பிக்கையைப் பெ வேண்டும் —ஆட்சியிலிருப்போர் மக்களின் குரல் கேட்கவும், அவ களது நியாயமான கோரிக்கை களுக்கு சிரம் வணங்கவும் செ தால்தான், நம்பிக்கையைப் பெ இயலும். நீதிமன்ற விசாரணை வேண்டும் என்பது, அப்பே பட்ட ஒன்றாகும். இதை ஒதுக் விட்டுக் காரியம் பார்க்க முற்ப வது, "எமக்குத் தலைவணங் ஏனெனில், இப்போது நாங்க தான் எஜமானர்கள்!!", என் கூறுவதாகும். இது, ஜனநாயக மல்லல; ஒழுங்குமல்ல.

★